Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தலை 18
இதழ் 45
தேசிய தினசரி

தபால் பெட்டி
போன் : 389

யாழ்ப்பாணம் பங்குனி 13 முஹறம் 29 சனிக்கிழமை (27-3-71)

நவநாகரிக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவல்லர்ஸ்
போன 444
தந்தி. இரத்தினம்ஸ்
50.கன்னாதிட்டி.யாழ்ப்பாணம்.

# கிழக்குப் பாகிஸ்தானில் உள்நாட்டுக் கலகம்

## ராணுவம்பொலிஸ்மோதல்; டாக்காவில் பலத்தசண்டை

### வானொலித்தொடர்புகள் ஸ்தம்பிதம்

டாக்கா, மார்ச், 26

கிழக்குப் பாகிஸ்தானில் உள்நாட்டுப் போர் உருவாகியுள்ளது. மேற்குப் பாகிஸ்தான் ராணுவத்தை எதிர்த்து கிழக்குப்பாகிஸ்தான் துப்பாக்கிப்படையும் பொலிஸ் படைகளும் போர்புரிகின்றன.

கிழக்கு பாகிஸ்தானில் புதிய இராணுவச் சட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டதையடுத்தே உள்நாட்டுக் கலகம் ஆரம்பமாகியுள்ளதென கிழக்குப்பாகிஸ்தான் செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

மேற்குப்பாகிஸ்தான் இராணுவத்தினருக்கும் கிழக்குப் பாகிஸ்தான் துப்பாக்கி, பொலிஸ் படையினருக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. கிழக்குப் பாகிஸ்தான் தலைநகரான டாக்காவில் இருதரப்பினருக்குமிடையே கடும் தாக்குதல் நடைபெறுகிறது இதனுல் இருதரப்பினர் மத்தியிலும் பெரும் ஆட்சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கிழக்குப் பாகிஸ்தானில் புதிய ராணுவச்சட்ட விதிகள் அமுலுக்குக் கொண்டு வரப்படும் என ரேடியோ பாகிஸ்தான் அறிவித்ததைத் தொடர்ந்தே அங்கு ஏற்கனவே நடைபெற்ற குழப்பங்கள் மேலும் வலுவடைந்து உள்நாட்டுப் போர் ஒன்றை உருவாக்கியுள்ளன.

இதையடுத்து டாக்கா ரேடியோ, ரெலிவிஷன் பத்திரிகைச் சேவைகள் திடீரென நிறுத்தப்பட்டன. டாக்காவிலும் ஏனைய மாகாணங்களிலும் ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது கிழக்குப் பாகிஸ்தானில் அரசியல் நடவடிக்கைகள் யாவற்றிற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. கூட்டங்கள், ஊர்வலங்கள், சொற்பொழிவுகள் நடத்துவதற்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் 24 மணித்தியாலத்துக்குள் வேலைக்குத் திரும்பாவிடில் ராணுவச் சட்டத்துக்கமைய அவர்களுக்கு இராணுவ நீதிமன்றத்தின் மூலம் கடும் தண்டனைவிதிக்கப்படும் எனவும் அறிவிக்

[8ம் பக்கம் பார்க்க ]

## சுதந்திரா பிரேரணைக்கு மதியழகன் மறுப்பு

சென்னை, மார்ச் 26

நடந்துமுடிந்த தேர்தலின் பின்னர் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் மோதல்கள் நிகழ்ந்ததால் பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறதென்றும் இதுபற்றி விவாதிக்க சபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டும் என்றும் கூறி சுதந்திரா கட்சி உறுப்பினர் டாக்டர் ஹாண்டே இன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் கொண்டுவந்த ஒத்திவைப்புப் பிரேரணைக்கு அனுமதி வழங்க சபாநாயகர் திரு. மதியழகன் மறுத்துவிட்டார்

இந்தப் பிரேரணை பற்றி முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி பேசுகையில் தேர்தலின் பின்னர் ஆங்காங்கே முற்போக்குக் கூட்டணியைத் சேர்ந்தவர்களும் தாக்குதல்களுக்குள்ளாகியிருக்கிருர்கள். இதுபோன்று ஜனநாயகக் கூட்டணியினரும் தாக்கப்பட்டிருக்கலாம் இவைபற்றி உரிய நடவடிக்கைகளைப் பொலிசார் எடுத்துவருகிருர்கள் எனவே இதைப் பெரிதுபடுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்

வகுப்பு ஜாதி அடிப்படையில் குழப்பங்கள் ஏதும் நடக்காமல் இருந்துவரும் நிலையைத் தொடர்ந்து பேணிப் பாதுகாக்க எல்லா கட்சியினரும் உதவவேண்டுமென்று அவர் கேட்டுக்

கொண்டார் சென்னை நிலைமை பற்றி விவாதிக்கக் கோரி திருமதி அனந்தநாயகி கொண்டுவந்த ஒத்திவைப்புப் பிரேரணையையும் சபாநாயகர் நிராகரித்தார்.

## 5 ஆயிரம் புதிய வீடுகள் இவ்வாண்டில் நிறுவப்படும்!

### அமைச்சர் கெனமன் தகவல்

கொழும்பு, வெள்ளி

இந்த ஆண்டில் 5 ஆயிரத்துக்குமதிகமான புதிய வீடுகளை அரசாங்கம் அமைக்கவிருக்கிறது. குறைந்த செலவில் கட்டப்படவிருக்கும் இவ்வீடுகள் குறைந்த செலவிலேயே வாடகைக்கு விடப்படும்: வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

(8ம் பக்கம் பார்க்க)

# பொன்னாலையில் நடந்த கோரச் சம்பவம்

## இரட்டைக் குழந்தைகள் தீக்குப் பலி!

— நமது சுழிபுரம் நிருபர் க, வாமதேவன் —

தீயின் கொடுமைக்கு இரட்டைக் குழந்தைகள் பலியானுர்கள் நெஞ்சை நெகிழ வைக்கும் இந்தக் கோரச்சம்பவம் சுழிபுரத்திலுள்ள பொன்னாலை என்ற கிராமத்தில்நேற்று முன்தினம் நடைபெற்றது!

உழுதுண்டு உழைத்துப் பிழைக்கும் ஏழை விவசாயி ஒருவரின் குடிசை திடீரெனத் தீப்பற்றிக் கொண்டபோதே அந்தக் குடிசையில் தன்னந்தனியர்களாக இருந்த இந்த இரு உயிர்களும் தணலில் வெந்து மாண்டன கண்களைக் குளமாக்கி கண்ணீரைத் தாரைதாரையாகச் சுசியவைத்து வேதனைத் தீயில் வேகவைக்கும் இந்தப் பரிதாபசம்பவத்தினுல் முழு[illegible]னைக் கிராமமே சோகத்தில் மூழ்கிக்கிடக்கிறது.

இரட்டைக் குழந்தைகளைப் பெற்றவர்கள் வீட்டிலில்லாத போதே இந்த ஈவிரக்க மற்ற கொடுமை நிகழ்ந்தது பெற்றவனோ தண்ணீர் அள்ளச்சென்று விட்டான் குழந்தைகளின் தகப்பனுரோ வெளியே எங்கோ சென்று விட்டார்.

அடுப்பில் தேநீர் தயா[illegible] நெருப்பு திடீரென்று ஏற்பட்ட [illegible] ஞுலா என்னவோ தனது 'சின்னத்தனத்தை'க் காட்டி விட்டது!

ஓலையால் வேயப்பட்ட அந்தச் சின்னஞ்சிறு குடிசை தீக்கிரையானது குழந்தைகளை இரக்கமின்றிப் பலி யெடுத்த தீ நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த உழைத்துச் சேர்த்து பசுமாடு வாங்க வைத்திருந்த ரொக்கப் பணத்தையும் நெல் மூட்டைகளையுமா விட்டுவைக்கும்?

தீயில் வெந்த குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றிவிட வேண்டுமென்ற ஆசையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றபோதிலும் காலன் தனது காரியத்தைச் சாதித்து விட்டான்.

அந்தோ பரிதாபம்! அழுது கதறும் பெற்றவர்களுக்கு என்ன ஆறுதல் தான் சொல்லமுடியும்? அந்த ஊரே அவர்களுடன் சேர்ந்து அழுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேஷன்
கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

றீகல்
ராஜ்கபூர்
நர்கிஸ்
நடித்த
யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30. 9-30
அவன்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் - லெட்சுமி
முத்துராமன் - நிர்மலா
நடித்த
வீட்டுக்கு வீடு

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்
கல்கியில் 'சோ' எழுதிய 'யாரோ இவர் யாரோ'
தொடர்கதை முழுநீள ஹாஸ்ய படமாக...



ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
சோ - மனோரமா - வாசு
நடித்த
ஆயிரம் பொய்

கெப்பிட்டல் (கொழும்பு)
விஜயா (மட்டக்களப்பு
சிவாஜி காஞ்சனா
நடித்த
சிவந்த மண்

வெகு விரைவில்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா
வெலிங்டன் (யாழ்நகர்)
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
நடித்த
மூன்றெழுத்து
(கலர்ப்படம்)


## ஸ்ரீமாவுக்கு பாராட்டு

கோட்டை., வெள்ளி

மக்கள் அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி 'சேகுவேரா' இயக்கத்தின் தீச்செயல்களை பூண்டோடு அழித்தது பாராட்டுக்குரியதாகும்.

இவ்வாறு இந்திய செய்திப் பத்திரிகையாகிய 'இந்தியன் எக்ஸ்பிறஸ்' திருமதி பண்டாரநாயகாவின் அரசாங்கத்தைப் பாராட்டி எழுதியுள்ளது. இப்பத்திரிகை இதுபற்றி மேலும் கூறுவதாவது'

இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயகா பத்திரிகை தணிக்கை ஆகிய எதிர்சட்டங்களையும்கொண்டு வராமல் அவசரகாலச் சட்டத்தின்மூலம் நாசவேலைகள் முறியடித்தது போற்றுதற்குரியதாகும்.

......

## நியமனம்

மூல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு புதிய முஸ்லிம் பாடசாலையின் தலைமை ஆசிரியராக தற்போது வவனியா பட்டாணிச்சிபுளியங்குளம் அரசினர் முஸ்லிம் பாடசாலையில் தலைமைஆசிரியராகக் கடமையாற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த ஜனாப் ஏ சீ எஸ் ஏ றகீம் நியமிக்கப்பட்டுள்ளனர்.


நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 2-30, 6-30, 9-45
முத்துராமன்-ராஜஸ்ரீ
நடித்த
அனுபவி ராஜா அனுபவி

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம்.ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
அடிமைப்பெண்

வெஸ்லி சினிமா
சாவகச்சேரி
தினசரி 2-30, 6-30, 9-30
ராஜன் - சௌகார் ஜானகி
நடித்த
துணைவன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30& 4' 30, p m.
3S3 PASSPORT TO HELL
(Spy Film)
6-30, 10-00 மணி
ஜெய்சங்கர்-விஜயகுமாரி
நடித்த
ஜீவனாம்சம்

விற்பனையாகின்றது
புலமைப் பரிசிற் பரீட்சை
உயர் கல்வி
தமிழ் மொழி 1-50
பொது உளச்சார்பு 2-25
கலைவாணி புத்தக நிலையம்
யாழ்ப்பாணம் கண்டி
3224

### தேவை

தேநீர் கடைக்கு அனுபவமுள்ள சமையல் ஆள் தேவை. நேரில் வரவும். மலர் கபே, அச்சுவேலி, (லிபேர்ட்டி தியேட்டருக்கு அருகாமை 2730

2 தொன் செயின் புளக் (Chain Block) விலைக்குத் தேவை. தொடர்புகொள்ளவும். சென் பீற்றஸ் ஐஸ் பக்ரறி முல்லைத்தீவு. 2471

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்திற்கு ஒரு கணக்குப் பதிவாளர் தேவை. விண்ணப்பிப்போர் 1-4-71க்கு முன்னதாகக் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணபிக்கவும் வயதெல்லை:- 22 — 35. தகைமைகள்: ஆகக் குறைந்தது கணக்கியல்/எண்கணிதம்/கணிதம் ஏதாவதொன்றில் திறமை சித்தியுடன் க. பொ. த. சாதாரண தரத்தில் சித்தியும் கூட்டுறவுப் பயிற்சி(சாதாரணதரம்) அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையும். க. கிருட்டினர், பொதுமுகாமையாளர், அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி 2729

மாதத்தில் 20 நாட்கள், காலையில் 3 மணி நேரம்; கொடிகாமத்தில் பாலர் வகுப்பு நடாத்த ஆசிரியை தேவை. எதிர்பார்க்கும் சம்பளத்துடன் விண்ணப்பிக்கவும். தலைவர், இராமநாதன் கழகம், கொடிகாமம். 2732


## கலைஞரை ஊக்குவிக்க தீர்மானம்

யாழ்ப்பாணம், சனி

சர்வ நுண்கலைத் தொழில் நிறுவனத்தின் நிர்வாக சபைக் கூட்டம் யாழ். பிரவுண் வீதியிலுள்ள சங்க இல்லத்தில் சங்கீதபூஷணம் திரு. பி சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது.

சகல இசை நடன நாடக மன்றங்களையும், இசை நடன நாடக விற்பன்னர்களையும் இந்நிறுவனத்தில் சேரச்செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கும் திறமைக்கும் ஊக்கமளிப்பதெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.


## வரி விளம்பரம்

### கல்வி

மோட்டார், டிராக்டர், டீசல் மெக்கானிக் டிப்புளோ பயிற்சி வகுப்புகள், ஏப்பிரல் மாதத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது. சேர விரும்புவோர் விபரம் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை நேரிலோ அல்லது கடித மூலம் தொடர்பு கொள்க. அதிபர், ஸ்ரீராஜ் ஒட்டோமொபைல், என்ஜினியரிங் நிறுவனம், மொம்சாக் மாளிகை, 11/A & 11/B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2731

### விற்பனைக்கு

நல்லூர் வடக்கில் எட்டு அறைகளுள்ள புதிய வீடும் மூன்று பரப்பும் முப்பத்தையாயிரம் ஒன்பது பரப்பு இருபத்தேழாயிரம். விலை கேட்கலாம் விபரங்களுக்கு: உரிமையாளர் (தரகரல்ல) 92 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. 2733

நெற்காணித்துண்டுகள்! காரைநகர் தீணுப்பிட்டியில் திருமதி கணேசனுக்கு சொந்தமான ஆதனங்களான ஒவ்வொன்றும் 11 பரப்புக்கொண்ட இரு நெற்காணித்துண்டுகள் பகுதியாகவோ முழுமையாகவோ விற்பனைக்குண்டு. விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரமுகமாகவோ கடிதமூலமோ தொடர்புகொள்க. திருமதி நே கணேசன், 317, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 2734


## கும்பாபிஷேகம்

தாவடி, வெள்ளி

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 31-ம் திகதி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பகல் விசேட அபிஷேக ஆராதனைகளும் அன்னதானமும் இடம்பெறும்.

இரவு முருகப்பெருமானின் ''கிராமச்சுற்றுலா'' வும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

......

## மாவை தேர் தீவைப்பு வழக்கு ஒத்திவைப்பு


மாவிட்டபுரம் வெள்ளி

மாவை தேர் தீவைப்பு வழக்கு அடுத்தமாதம் 4-ம் திகதி ஒத்திப்போடப்பட்டுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குச்சொந்தமான இருதேர்களை தீவைத்து 20 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்படுத்தியதாகவும், செ, சண்முகவடிவேல், எஸ் பொன்னுச்சாமி ஐயர் ஆகியோருக்கு காயம் விளைவித்ததாகவும் குற்றம்சாட்டி எஸ். ரி, என் நாகரத்தினம், எஸ் மகேஸ்வரன். எஸ். இராசையா ஆகியோர்மீது இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது

மல்லாகம் நீதிபதி எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அடுத்த மாதம் 4-ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.


ஒரு கல்லில் செதுக்கியுள்ள வாக்கியங்கள் ஒரு சிறுவனின் வாழ்க்கையில் கண் கூடாகப் பலிக்கும் கதை
வின்ஸர் வெண்திரையில்
திரையிடப்படுகிறது!



தினசரி 4 காட்சிகள்
மாஸ்ரர்பிரபாகர், பேபி சுமதி,
லட்சுமி, மனோரமா,
வி.எஸ்.ராகவன், கருணிராஜன்,
சீர்காழி கோவிந்தராஜன்
நடிக்கும்
வா ராஜா வா
(ஈஸ்ட்மன் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குப்பாகிஸ்தானில்

# பயங்கர ராணுவ ஆட்சி நடக்கிறதாம்

## ஷேக் மீண்டும் குற்றஞ்சாட்டுகிறார்

டாக்கா, மார்ச் 26

**கிழக்குப் பாகிஸ்தானில் பயங்கர ராணுவ ஆட்சி கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாக அவாமி லீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் கூறியிருக்கிறார்.**

பாகிஸ்தானில் கிழக்கு மேற்கு இரு பகுதிகளிலும் ஆங்காங்கே குழப்பங்களும் கொள்ளைகளும் நடைபெற்று வருவதாக செய்திகள் கூறுகின்றன.

நாளைய தினம் பொது வேலைநிறுத்தம் ஒன்றை நடத்தும்படி ஷேக் முஜிபுர் ரஹ்மான் கிழக்குப் பாகிஸ்தான் மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

கிழக்குப் பாகிஸ்தான் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மானுடனும், மேற்குப் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் சுல்பிகார் அலிபூட்டோவுடனும் டாக்காவில் அரசியல் அமைப்புப் பற்றி ஆலோசனைகள் நடத்திய பின்னர் கராச்சிக்குத் திரும்பியிருக்கிறார் கடந்த பதினொரு நாட்களாக யாஹ்யா கான் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளில் எதுவித முடிவும் ஏற்படாதது குறித்து அரசியல் வட்டாரங்களில் பெருத்த ஏமாற்றம் காணப்படுகின்றது.

அதிபர் யாஹ்யாகானுடன் நடத்திய பேச்சுக்களில் எதுவித முன்னேற்றமும் ஏற்படாமல் போனது குறித்து ஷேக் முஜிபுர் ரஹ்மானும் கவலை தெரிவித்திருக்கிறார் என்று பாகிஸ்தான் வானொலி அறிவித்தது.

கிழக்குப் பாகிஸ்தானில் பொது மக்கள்மீது ராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைக் கண்டிக்கும் வகையில் பொது வேலைநிறுத்தம் ஒன்றை நடத்தும்படி ஷேக் முஜிபுர் ரஹ்மான் கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

கிழக்குப் பாகிஸ்தானில் பயங்கர ராணுவ ஆட்சி கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதாக அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார். கிழக்குப் பாகிஸ்தான் பொலிசாரை ராணுவம் புறக்கணித்து வருவதாகவும் அவர் கூறியிருக்கிறார். ராணுவத்தின் கெடுபிடிகளை உடனடியாக நிறுத்தும்படி அவர் அதிபர் யாஹ்யாகானைக் கேட்டிருக்கிறார்.

கிழக்குப் பாகிஸ்தானில் பல இடங்களில் நடைபெற்றுள்ள சம்பவங்களில் பலர் கொல்லப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

பஞ்சாப்பிலுள்ள லெயால்பூரில் நடைபெற்ற சம்பவம் குறித்து இரண்டுவிதமான கருத்து நிலவுகின்றது. இங்கு ராணுவம் அழைக்கப்பட்டுள்ளது. இரவில் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. ராணுவத்துக்கும் பொதுமக்களுக்குமிடையில் நடைபெற்ற மோதலில் 100 பேர்வரை காயமடைந்ததாகவும் 30 பேருக்கு படுகாயம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இங்கு நடந்த சம்பவங்கள் மிகைப்படுத்திக் கூறப்படுவதாக ராணுவ ஆட்சியாளர் அறிவித்துள்ளனர். துப்பாக்கிகளுடன் கிராமப் பகுதிகளிலிருந்து ஒரு கும்பல் இந்த நகருக்குள் வந்ததாகவும் உள்ளூர் வாசிகளல்லாதவர்களின் வீடுகள் தாக்கப்பட்டதாகவும் அமைதியை நிலைநாட்டச் சென்ற ராணுவத்தினர் மீது அவர்கள் சுட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காகவே ராணுவம் திருப்பிச் சுட்டனர் என்றும் இதில் எட்டுப்பேர் மாத்திரமே கொல்லப்பட்டதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

செய்தூரிலும் உள்ளூர் வாசிகளல்லாதவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதால் தபால் கொண்டு சென்ற வண்டியொன்று தாக்கப்பட்டு அதன் கண்டக்டர் அடித்துக் கொல்லப்பட்டதாகவும் கூறப்பட்டது.

மேற்குப் பாகிஸ்தானில் சிட்டாகாங்கில் மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் பாதுகாப்புப் படைகளுக்குமிடையில் மோதல்கள் நடைபெற்று வருகின்றனவாம்.

அரசியல் பிரச்னையில் தீர்வுகாண்பதில் ஏற்பட்டு வரும் தாமதம் குறித்து ஷேக்முஜிபுர் ரஹ்மான் கவலை தெரிவித்திருக்கிறார்.

கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும், எந்த மொழியைப் பேசினாலும் எந்த வழித்தோன்றலாய் இருந்தாலும் அவர்கள் பங்களா தேசத்தின் மக்களே. அவர்களின் உறுதியான ஒற்றுமையை எவரும் அசைக்க முடியாது என்று ஷேக் முஜிபூர் ரஹ்மான் அறிவித்திருக்கிறார்.

## காலத்தால் அழியாத இறைவன் மீது நம்பிக்கை வையுங்கள்

— வித்தியாதரிசி

மாவிட்டபுரம், வெள்ளி

'வருங்கால சந்ததியாகத் திகழப்போகும் மாணவர் மத்தியில் இன்று ஒழுக்கமின்மை தலையெடுத்துள்ளது. இந்நிலை நீடிக்குமானால் வருங்கால சமுதாயம் அழிவுற வழி ஏற்படும்' என்று தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பெற்றோர் தினவிழாவிலும் கனிஷ்ட பாடசாலை மாணவர் பரிசளிப்பு விழாவிலும் கலந்து கொண்டு உரையாற்றிய காங்கேசன்துறை வட்டார வித்தியாதரிசி திரு. கா. சோமசுந்தரம் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. மா. மகாதேவன் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் 'பண்டைய காலம் முதல் எம் நாட்டிலுள்ள மதங்கள் இறைவனை அடைய விழா எடுத்து வந்தன. ஆனால் இன்று அரசியல்வாதிகளுக்கு விழா எடுக்கும் நிலை உருவாகியுள்ளது. அரசியலும் அரசியல்வாதிகளும் காலத்தால் அழிபவை. காலத்தால் அழியாத இறைவன் மீது நம்பிக்கை வைக்க வேண்டுமென்றார்.

கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினமும் பேசினார்.

திருமதி தெ. து. ஜெயரத்தினம் பரிசில்களை வழங்கினார். அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் திரு. தி. வேலாயுதம் நன்றியுரை கூறினார்.

கனிஷ்ட பாடசாலை சிறுவர் சிறுமிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

உயர்கல்வி பெற

### இந்தியா சென்றனர்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியைச் சேர்ந்த ஜனாப் ஜி. கபூர்தீனும், மாவடி வீதியைச் சேர்ந்த ஜனாப நயினாமுகம்மது மன்சூரும் உயர்கல்வி பெற இந்தியா சென்றுள்ளனர். ரசாயனத்துறையில் இவர்கள் பயிற்சிபெற்றுத்திரும்புவர். விமானமூலம் பிரயாணம் செய்த இவர்களை ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் பலாலி விமான நிலையத்தில் வழியனுப்பிவைத்தனர்.

மேற்காஸிய

## அமைதிப் பேச்சு ஒத்திவைப்பு?

### ஜாரிங் மாஸ்கோ திரும்புகிறார்

வாஷிங்டன், மார்ச் 26

மேற்காசிய அமைதிப் பேச்சுக்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்த முயற்சியில் ஈடுபட்டிருந்த ஐ. நா. அமைதித் தூதுவர் டாக்டர் ஜாரிங் மாஸ்கோவில் தமது கடமைகளை தொடர்வதற்காக அங்கு புறப்பட்டுச் செல்கிறார். மாஸ்கோவில் டாக்டர் ஜாரிங் சுவீடன் தூதுவராக இருந்துவருவது தெரிந்ததே.

ஏப்ரல் மாதம் பிற்பகுதியில் அவர் மீண்டும் வாஷிங்டன் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் அதற்கு முன் தமது வருகை அவசியம் என்றால் உடனே திரும்பிவரச் சித்தமாய் இருப்பதாக அவர் அறிவித்துள்ளார்.

டாக்டர் ஜாரிங் மாஸ்கோ போவதற்கு முன்னர் இஸ்ரேல், எகிப்து, ஜோர்டான் தூதுவர்கள் அவரைத் தனித்தனியே சந்தித்துப் பேசினார்கள்.

எகிப்து தனது மாகாண கவர்னர்களுக்கு ராணுவ அதிகாரங்களை வழங்குகின்றது. அவசியமான சமயங்களில் ராணுவ நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபட வசதிசெய்யப்பட்டுள்ளது. இதேசமயம் ஐக்கிய அரபுக்குடியரசு அதிபர் துருக்கிய தலைவர்களைச் சந்திப்பதற்காக இஸ்தான்புல்லுக்கு விரைவில் செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே அவர் லிபியாவுச் சென்று அந்நாட்டு அதிபர் கேணல் கடாபியுடன் ஆலோசனை நடத்திவிட்டுத் திரும்பியிருக்கிறார்.

இதற்கிடையில் இஸ்ரேலியர் தாங்கள் பிடித்துக் கொண்டுள்ள ஜெருசலம், கோலான்மலைப்பகுதி ஆகியவற்றைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலிருந்து விலகிக்கொள்ளவேண்டுமென்ற இஸ்ரேலிய தலைவர் பென் குரியன் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

......

### யப்பான் உதவி

கோட்டை, வெள்ளி

யப்பான் அரசாங்கம் நூல் வெளியீட்டு அலுவல்களில் இலங்கைக்கு உதவி செய்ய முன்வந்துள்ளது.

இலங்கையில் தற்போதுள்ள நூல்கள் வெளியிடும் முறைகள் குறித்து ஆராய்வதற்கு ஐ. நா. கல்வி நிபுணர்கள் இருவர் அடுத்த மாதம் இலங்கை வரவிருக்கிறார்கள்.

இவர்கள் இலங்கையில் உள்ள தனியார் அரசாங்க நூல் வெளியீட்டகங்களுக்குச் சென்று அங்கு நூல்கள் வெளியிடும் முறைகளையும் வெளியிட்ட நூல்களை ஒழுங்குபடுத்தியுள்ளமை ஆகியன குறித்து ஆராய்ந்து அறிக்கையொன்றைத் தயாரிப்பர்.

### புதியவரி ஏதுவும் இல்லை

சென்னை, மார்ச் 26

தமிழ்நாடு 1971-72-ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் புதிதாக வரிவிதிப்பு யோசனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்தஉத்தேசவரவு செலவுத்திட்டத்தை முதலமைச்சரும் நிதி அமைச்சருமான மு. கருணாநிதி தமிழ் நாடு சட்டசபையில் சமர்ப்பித்தார்.

தமிழ் நாட்டு 71-72-ம் ஆண்டு வருமானம் 446 கோடி 36 லட்சம் 458 கோடி செலவாகும் இந்த நிதியில் 12 கோடி ரூபா துண்டு விழுகிறது அடுத்த ஆண்டு பற்றாக்குறையைச் சேர்த்தால் பற்றாக்குறை 38 கோடி ரூபா வாகும்.

மாநில அரசுக்கும் மத்திய அரசுக்குமுள்ள உறவு பற்றிக் கேட்டகப்பட்ட பொழுது மாநிலத்திற்கு மத்திய அரசு பாரபட்சம் காட்டுவதாக கருணாநிதி தெரிவித்தார் நடப்பாண்டு திட்டமிட 90 கோடி ரூபாவும் அடுத்த ஆண்டுக்கு 100 கோடி ரூபாவும் மத்திய அரசு கொடுத்துதவும் எனத் தான் நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ் நாடு கிராம மின் திட்டத்திற்கு 40 கோடி ரூபாவும் கல்விக்கு 80 கோடி ரூபாவும் ஒதுக்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

......

### லாவோஸில் கம். தாக்குதல்

வியான்டியான், மார்ச் 26

லாவோஸில் அரச தலைநகரான லுவாங் பிரபாங் மீது பாதட் லாவோ படைகள் இப்பொழுது தொடர்ந்து தாக்குதல் நடத்திவருகின்றன இந்த நகரின் விமான நிலையத்தின் மீதே இவர்கள் கண்ணாய் இருப்பதாகவும் அதன் மீதே தமது தாக்குதல்களைக் குறிவைத்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

லாவோசுக்குள் மீண்டும் தென்வியட்னாம் படைஅணியொன்று புகுந்திருப்பதாகவும் கம்யூனிஸ்ட்கள் மீண்டும் பழைய இடங்களுக்குள் புகுவதை இவர்கள் தடுக்க முயற்சி செய்வார்கள் என்றும் கூறப்படுகின்றனர்.

......

யாழ்ப்பாணம், சனி

மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றத்தாரின் 'இன்பநாள்' என்ற சமூக நாடகம் கடந்த புதன்கிழமை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைத் திறந்தவெளி அரங்கில் மேடையேற்றப் பட்டது.

மானிப்பாய் கோவில்பற்று முன்னேற்றச்சங்க நிதிக்காக இந்நாடகம் மேடையேற்றப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொன்மொழி

மனிதர்களின் அறிவுக்கண் உள்ளவனே சிறந்தவன்; அதிகமாய்ப் பேசுவதனால் மட்டும் ஒருவன் அறிஞனல்ல. முட்டாள் தன் முட்டாள்தனத்தை உணர்வானேயானால், அந்த அளவுக்கு அவன் அறிவாளி ஆனால் தன்னைப் பாண்டித்தியமுள்ள அறிஞனாக எண்ணிக்கொள்பவனே அடிமுட்டாள்.

— புத்தர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம் 13ந் திகதி (27-3-71)


## ஜனநாயகமுறை இருக்கிறது

ஆட்சிபீடத்தில் மாற்றம் செய்யப்படவேண்டுமென மக்கள் விரும்பினால் அதை நிறைவேற்றுவதற்கு ஜனநாயக முறையில் பல வழிகள் உண்டு என்றும் குழப்பத்தையும் கலகத்தையும் ஏற்படுத்தி பயங்கரச்செயல்கள் மூலம் ஆட்சிபீடத்தில் மாற்றம்செய்ய முனைந்தால் அதற்கு அரசாங்கம் ஒருபோதும் பணிந்துவிடாது என்றும் நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார். வாள் எடுத்தவன் வாளால் மடிவான் என்பது முதுமொழி ஆசிய ஆபிரிக்க அரேபியநாடுகள் பலவற்றில் சமீபகாலத்தில் நடந்து முடிந்தபல சம்பவங்கள் இதற்குச் சரியான சான்று

'நாம் தமிழர்' இயக்கம்' என ஒன்று இங்கு வலுப்பெற்று வருவதாகவும் அதை ஒழித்துக்கட்டவேண்டுமென்று ஒருசில பத்திரிகைகளும் சில அரசியல்வாதிகளும் 'பூச்சாண்டியை'க் கிளப்பிவிட்டனர். இல்லாத ஒன்றைப் பெரும் பூதமாக உருவாக்குவதற்குச் சிலர் முனைந்து கொண்டிருந்ததால் உண்மையாகவே ஒரு பூதம் உருவாகி வந்ததை பலரும் கவனிக்காமலிருந்துவிட்டனர் இது கவலைக்குரியது என்றாலும் நிலைமை மோசமடைவதற்கு முன் இதைக் கண்டுபிடித்து அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் நாட்டு மக்கள் பாதுகாப்பாகவும் அமைதியாகவும் வாழ்வதற்குத் தனக்குள்ள பொறுப்பை நிறைவேற்றவும் முன்வந்த அரசாங்கம் பாராட்டுக்குரியது.

கலகத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தமுனையும் தேசத்துரோக சக்திகளின் தவறான பாதையில் சில இளைஞர்கள் தெரிந்தோ தெரியாமலோ செல்லமுனையும்போது அவர்களைத் திருத்தி சரியான பாதையில் செல்வதற்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பும் கடமையும் பொலிஸ் இராணுவத்துக்கும், அரசாங்கத்துக்கும் மட்டுமல்ல சமய சமூகப் பெரியார்களுக்கும் பெற்றோர்களுக்கும் உண்டு.

இதை உணர்ந்தே ஒரு தாய் என்ற முறையில் தங்கள் பிள்ளைகளை தவறான வழியில் செல்வதற்கு அனுமதிக்கவேண்டாமென்று தாய்மார்களுக்கு சில தினங்களுக்கு முன்னர் பிரதமர் வேண்டுகோள் விடுத்தார்

பிரதமர் தமது வேண்டுகோளில் தெரிவித்திருந்தது போல் இந்த நாட்டு இளைஞர்களின் பிரச்னைகளை அவரும் மற்றும் அமைச்சர்களும் அறியாமலில்லை. இளைஞர் பிரச்னை இந்த நாட்டில் மட்டும்தான் இருக்கிறதென்பதுமல்ல. உலக நாடுகள் பலவற்றிலும் இப்பிரச்னை இருக்கத்தான் செய்கிறது. கலகத்தையும் குழப்பத்தையும் உருவாக்கி ஆட்சிபீடத்தில் மாற்றம் ஏற்படுத்திய பின்னரும் கூட சில நாடுகளில் இந்தப் பிரச்னை தீர்க்கப்படாமலிருக்கிறது.

எனவே இளைஞர் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு சரியான திட்டம் தீட்டுவதற்கு அரசாங்கத்துக்கு இளைஞர்களும் தகுந்த ஆலோசனை தெரிவித்து உதவவேண்டும். இதே சமயம் இளைஞர்கள் தவறான பாதையில் செல்லாமல் தடுப்பதில் சமய சமூகப் பெரியார்களும் அரசியல் தலைவர்களும் பெற்றோர்களும் அரசாங்கத்துக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டியதும் அவசியமாகும்.

அரசாங்கத்தின் செயல் திட்டங்கள் பிடிக்கவில்லையாயின் ஆட்சிபீடத்தில் மாற்றம் செய்வதற்கு டாக்டர் என் எம் பெரேரா கூறியிருப்பதுபோல் ஜனநாயக முறை இருக்கவே இருக்கிறது.

## 'யாழ். பல்கலைக்கழகம்: சங்கீதம், இந்து கல்வி வேண்டும்!'

யாழ்ப்பாணம், சனி

கடந்த வியாழக்கிழமை அகிலஇலங்கை இந்துமாமன்றத்தின் பதினாறும் ஆண்டு நிறைவு மகாசபைக்கூட்டம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது இக்கூட்டத்தில் சில பிரேரணைகள் கொண்டுவரப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டன பிரேரணைகள் விபரம் வருமாறு;-

■ யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் பொழுது சங்கீதத் துறையும் இந்துசமயத் துறையும் அமைக்கப்படவேண்டுமென்று அரசாங்கத்தைக் கோருதல்.

■ இந்து மாணவர்கள் பயில்கின்ற பாடசாலைகள் அனைத்திலும் இந்து சமயம் கற்பிப்பதற்கான சமய ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டுமென கல்வி அமைச்சரைக் கோருதல்.

■ திருக்கோணேஸ்வரக் கோயிற்சுற்றுடல் புனித நகராகப் பிரகடனம் செய்யப்படவேண்டுமென அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளுதல்.

■ இந்தியாவிற்குப் புனித யாத்திரை மேற்கொள்ளும் இந்துக்களுக்கு செலாவணித் தடையை நீக்க அரசாங்கத்திடம் கோரி இச்சலுகையை இந்துசமய யாத்திரிகர்களுக்கு பெற்றுக் கொடுத்தல்.

■ தெகியோவிற்ற தேர்தற் தொகுதியில் வசிக்கும் இந்து மக்கள் வழிபாடு செய்வதற்காக முருகன் கோவில் ஒன்றைஸ்தாபிக்க இந்து மாமன்றம் உதவிபுரிதல்.

## "கட்சிக்கொள்கைக்கு அப்பாற்பட்டு பரந்தமனத்துடன் செயலாற்றுங்கள்"

### உள்ளூராட்சித்தலைவர்களுக்கு ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி

"தமது சொந்தக் காரியங்களையும் விடுத்து எந்தவித ஊதியத்தையும் கருதாது வழ்க்கைத்தரத்தில் பின்தங்கிய கிராம மக்களுக்குச் சேவைசெய்ய முன்வந்த கிராமசபைத் தலைவர்களாகிய நீங்கள் பொறுப்புணர்ச்சியுள்ளவர்கள், உங்கள் சேவை மனப்பான்மையை நான் பாராட்டுகின்றேன்."

இவ்வாறு வவனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற வவனியா மாவட்டக் கிராமசபைத் தலைவர்கள் மகாநாட்டுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் உள்ளூராட்சி ஆணையாளர் திரு' டபிள்யு ஈ. வி எஸ். டி அல்விஸ் கூறினார்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது!- உள்ளூராட்சிமன்றத் தலைவர்களாகிய நீங்கள் கட்சிக் கொள்கைக்கு அப்பாற்பட்டு பரந்த மனத்துடன் எல்லாக் கிராமங்களையும் சமமாக மதித்து சேவையாற்ற வேண்டும். குறுகிய மனப்பான்மையுடன் பதவியின்செல்வாக்கை உபயோகித்துமக்களிடையே வேற்றுமையைப் பாராட்டிச்சேவை செய்யப் புகுந்தால் உங்கள் புனிதமான பதவிக்குக் களங்கம் ஏற்படுவதுடன் உங்கள் சேவையும் போற்றத்தக்கதாகிவிடும் 4 வருடச் சேவையில் கிராம ரோட்டுகளுக்கு கிரவல் போடுவதுடன் நின்றுவிடாது நல்ல ஆக்கபூர்வமான திட்டங்களை வகுத்து அத்திட்டங்களால் கிராமமும் கிராம மக்களும் பயனடையக்கூடிய முறையில் செயலாற்றவேண்டும். இன்றைய அரசாங்கம் கிராம சபைத் தலைவர்களுக்கு மிக்க மதிப்புக் கொடுப்பதுடன் அதே நேரத்தில் பொறுமையுணர்ச்சியற்று கிராமசபையின் சீரழிவுக்குக் காரணமாகவிருக்குத் தலைவர்களையும் பதவியிலிருந்து அகற்றத் தயங்கக்கூடாது

சமாசச் செயலாளர் திரு. பொ. திருஞானசம்பந்தனால் ஏற்கனவே தமக்கு அனுப்பப்பட்ட மகஜர் கிடைத்ததாகவும் அதில் கேட்டுள்ள சில நல்ல விஷயங்களுக்குக் கூடிய விரைவில் தன்னால் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

சமாசச் செயலாளர் திரு. பொ. திருஞானசம்பந்தன் தமது நன்றியுரையில்' கிராம சபைகள் தமது தேவைக்கு முடிக்குரிய நிலங்களைப் பெறுவதில் சிரமம் ஏற்படுவதால் பொதுக்கிணறுகள் சுடுகாடு இடுகாடுகள் பொதுப்பாதைகள் பாலங்கள் சனசமூக நிலையங்கள் விளையாட்டு மைதானங்கள் போன்ற நல்ல விடயங்களைச் செய்வதில் தங்கள் சேவையைத் துரிதப்படுத்த முடியாதிருக்கின்றது என்றும் இதுவிடயமாகச் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளுமாறு ஆணையாளரைக் கேட்டுக்கொண்டார். அத்துடன் தாங்களில் நம்பிக்கை வைத்துத் தங்களைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுத்த கிராம மக்களுக்குச் சேவை செய்வதே நமது பணி. இதை மறுப்பின் நமது கிராம மக்களிடமிருந்து நாம் வெகுதூரம் சென்றவர்களாவோம். எமக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எல்லோருமாகத் தொண்டுகள் செய்வோம்' எனக் கூறினார்

## தனித்தியங்கத் தீ மானம்

சுழிபுரம், வெள்ளி

பண்ணாகம் ஸ்ரீ முருகன் கிராம முன்னேற்ற சனசமூக சேவா வாலிபர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கிராம முன்னேற்றச் சங்கம் வேறாகவும் சனசமூக சேவா வாலிபர் சங்கம் வேறாகவும் இயங்குவதாக ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது சங்கத் தலைவர் திரு இ. சிவப்பிரகாசம் தலைமையில் நடந்த இப்பொதுக்கூட்டத்தில் தனித்தியங்கும் இரு சங்கங்களினதும் உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

சன சமூக சேவா வாலிபர் சங்கத்துக்கு தலைவர்: பண்டிதர் ப. இராசகுரு, உபதலைவர்: திரு மா. சீவரத்தினம், செயலாளர்: திரு ஆ. கதிரமலைநாதன், உபசெயலாளர்: திரு க. தெய்வேந்திரன், தனாதிகாரி: திரு க. துரைலிங்கம் கணக்குப்பரிசோதகர்: திரு வி. துரைசிங்கம். 4 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

கிராம முன்னேற்றச் சங்கத்துக்கு தலைவராக திரு இ. சிவப்பிரகாசமும், காரியதரிசியாக திரு. சி. வெற்றிவேலுவும், தனாதிகாரியாக திரு மா, பாக்கியநாதனும் கணக்குப் பரிசோதகராக திரு ச னகரசனும் 6பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளர்

புத்தூர், வெள்ளி

அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரியின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக முன்னாள் கிராம அதிகாரி திரு ஈ. வே இராமசாமி கோப்பாய் எம். பி. யின் சிபார்சைத் தொடர்ந்து சுகாதார அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## "இல்லறத்திலிருந்து யோகத்தை அடைவது தான் சிறந்த வழி"

### மானிப்பாயில் கிரிதாரி பிரசாத்

தாவடி, வெள்ளி

இல்லறத்தில் இருந்து போகத்தை அனுபவித்து யோகத்தை அடைவதுதான் சிறந்த வழியாகும். இம்மை வேறு மறுமைவேறல்ல. இம்மையைத் தொடர்ந்துவருவதுதான் மறுமை. இம்மையிலே இல்லறத்தில் வாழ்ந்து மறுமைப்பயனை அடைந்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். சமய குரவர்களிலே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தன்னைப்பாடினார். சுந்தரமூர்த்தி நாயனார் பொன்னைப் பாடினார் அப்பர் சுவாமிகள் அப்பனைப் பாடினார், இவர்களிலே அதிக துன்பப்பட்டு உழவாரப்பணி செய்த உழைத்துண்டு வாழ்ந்தவர் அப்பர் சுவாமிகள் மந்திரியாகச் சென்று பின்னர் கோவணாண்டியாகத் துறவுடன் திரும்பியவர் மாணிக்கவாசக சுவாமிகள். துறவு இயற்கையிலேயே அமைய வேண்டிய தொன்றாகும் வலிந்து துறவைத் தேடிக்கொள்வது பொருத்தமாகாது, எவனொருவன் இல்லறத்தில் இருந்துகொண்டு ஆண்டவனை நினைக்கின்றானோ அது துறவறத்தில் இருந்துகொண்டு ஆண்டவனைப் பலமுறை எண்ணுவதிலும் மேலானதாகும்

இவ்வாறு தமிழகப் பெரியார் திரு கிரிதாரி பிரசாத் மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோவிலில் நடாத்தியசொற்பொழிவின் போது கூறினார்

சைவப்பெரியார் திரு மு. வைரமுத்துவின் தலைமையில் மானிப்பாய் இந்து சமய விருத்திச் சபையின் ஆதரவில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு கிரிதாரி பிரசாத் மேலும் பேசிய போது கூறியதாவது:

திருக்குறளைப்பற்றி அதன் பெருமை பற்றியெல்லாம் மேடைமேடையாகப் பேசுகிறார்கள். ஆனால் அதைக் கடைப்பிடிப்பவர்கள் அருமையிலும் அருமை. கொலை செய்தல் பாவம், புலாலுண்ணல் பாவம் என்றெல்லாம் பேசுகிறார்கள் ஆனால் இவைகளெல்லாவற்றையும் செய்யாமல் விடத் தவறுவதில்லை ஆனால் அதன்படி ஒழுகுதல் வேண்டும் ஒழுகினாலன்றிப் பலனொன்றுமில்லை.

இவ்வுலகிலேயே மானிட சிருஷ்டிக்கு ஆதாரமாகவுள்ள தாய்மார்களைப் போற்றவேண்டும். தெய்வமாக எண்ணுதல் வேண்டும். குடும்பத்திலே பெண்ணானவள் கலக்கமடையாமல் இருக்க வேண்டும். எந்தக் குடும்பத்திலே பெண்ணானவள் துயரமடைந்து கண்ணீர் வடிக்கின்றாளோ அந்தக் குடும்பம் சீரழிந்துவிடும்

குழந்தை பிறப்பதற்கு சிலமணி நேரங்களுக்கு முன்னரே தாயிடம் பால்சுரக்கச் செய்து குழந்தைக்கு உணவளிக்கும் இறைவன் அவ்வப்போது அறிந்து முன்கூட்டியே அருளமுதளிக்கும் இறைவன் நமக்கெல்லாம் உணவளிக்காது விட்டுவிடுவானா!

ஆண்டவனை அநுதினமும் மனமாரப் போற்றியேற்றி வேண்டினால் அவ் ஆண்டவன் இம்மையிலே தேவைப்படுகின்றனவெல்லாம் தருவான். அது மறுமையிலும் தொடர்ந்து வரும்.

தலைமையுரையாற்றியதிரு எம் வைரமுத்து 'நடமாடும் பல்கலைக்கழகம்' கிரிதாரி பிரசாத்எனப் பாராட்டிப் பேசினார். தியாகிஇராசகோபாலும் இவ் வைபவத்தில் உரையாற்றினார்.

## 'மனத்தூய்மையே உண்மையான நாகரீகம்'

மாவிட்டபுரம், வெள்ளி

'நல்ல உடை உடுத்து, நல்ல வீடுகட்டி, நடை, உடை, பாவனையில் நல்லாக நடப்பது நாகரீகம் அல்ல. மனத்தில் தூய்மை ஏற்பட்டால்தான் உண்மையான நாகரீகம் உருவாகும்'. இவ்வாறு தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆசிரியர், மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய காந்தியப் பேராசிரியர் திரு நா கிரிதாரி பிரசாத் கூறினார்.

செல்வன் க குகனேசன் தலைமையில் நடந்த இச் சொற்பொழிவில் அவர் தொடர்ந்து பேசுகையில்: முதலில் நாகரீகத்தையே உடுத்துக் கொண்ட வள்ளுவர் உள்ளத் தூய்மையே உண்மையான நாகரீகம் என்று கூறினார். இதையடுத்து வந்த திருவாசகமும் இதைத்தான் சுட்டிக் காட்டியது ஆகவே இந் நூல்கள் காட்டிய நல்ல உன்னத வரைவிலக்கணங்களை நாம் பின்பற்ற வேண்டும். இதை பெரும்பாலும் இன்றைய பெண்மணிகள் உணரவேண்டும் இன்று உலகம் மாறிய இந் நேரத்தில் நாகரீகம் என்று கூறி ஆபாசங்களை வளர்ப்பதை முற்றாக தடை செய்ய வேண்டும்

உலகத்தில் உள்ள சகலருக்கும் பொதுவான திருக்குறளை நாம் பெற்றுள்ளது நமக்கு பெருமை அளிக்கும் விடயம் ஆகும். உலகத்தின் தூய்மையான பாதைக்கு வழிகாட்டியாக அமைந்துள்ள திருக்குறளை நாம் மதித்து அதன்படி ஒழுக வேண்டும் என்றார்.

## காங்கேசன்துறையில் அரிசிக்கப்பல்

காங்கேசன்துறை, வெள்ளி

காங்கேசன் துறைக்கு 10353 தொன் நிறையுள்ள 103596 மூடை சிறுப்பச்சையரிசியுடன் 'கொஸ்ராஸ் மைக் கிளஸ்' என்னும் கப்பல் வந்துள்ளது. இவ் வருடத்தில் காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு வந்த முதல் கப்பல் இதுவாகும். இக் கப்பல் வருகையினால் சுமார் 700 பேருக்கு தற்காலிக வேலை வசதி கிடைத்துள்ளது.

## திருமணமான இளம்பெண் தற்கொலை

யாழ்ப்பாணம், சனி

சயிக்கில் விற்பனைபற்றி ஏற்பட்ட தகராறில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 23 வயதான செல்வ ராணி என்பவர் நச்சுதிராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

இவரது கணவரான நடேசுராசதுரை 85 ரூபாவிற்கு சயிக்கிளை விற்று 60 ரூபாவை மட்டும் மனைவியான செல்வராணியிடம் கொடுத்ததாகவும் இதனால் குடும்பத்தகராறு ஏற்பட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு: என். இராசநாயகம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமமடு கொலை வழக்கு

## 'முதலில் நடராசாவும் பின் யோகராசாவும் அடித்தனர்'

யாழ்ப்பாணம், சனி

'நானும் இறந்தவரும் பியசேனுவும் சென்று கொண்டிருந்தோம் அப்போது எதிரிகள் இருவரும் பொல்லுடன் வந்தார்கள். நடராசா என்னை கடந்து சென்று இறந்தவரைப் பார்த்து 'என்னடா பேயா பொய் சொல்லிக் கொண்டு வாருய் என்று சொல்லி பொல்லால் அடித்தார் அதன் பின் யோகராசா அடித்தார்.'

சேமமடு கொலை வழக்கில் சாட்சியமளித்த சண்முகம் இராசையா மேற்கண்டவாறு கூறினர். இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வீரமந்திரியின் முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 69-ம் ஆண்டு மேமாதம் 15-ம் தேதி கதிர்சாமு யோகராசா, மணியம் நடராசா ஆகியோர் ரி. காசிப்பிள்ளை என்பவரை கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே வி. எஸ். சண்முகநாதன் அட்வகேட் இ. ஆறுமுகத்தின் உதவியுடனும் புறக்டர்களான ரீ. பூபாலன், வி ஏ ஈ பாலசுப்ரம். வி யோகேஸ்வரன் ஆர் சிவா கணேசன் ஆகியோரின் அனுசரணையுடனும் ஆஜரானர். எதிர்க்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் வி குலநாயகம் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குடிய தரப்பில் அட்வகேட் சந்திரசேகரா ஆஜரானர்.

சண்முகம் இராசையா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: சேமமடுவில் நான்கு வருடகாலமாக வேலைசெய்துவருகிறேன். சம்பவம் நடந்த தினம் காலை வேலைக்குப் போகவில்லை. வீட்டிலிருந்தேன். ஜெயராசசிங்கம் கடைக்கு பீடி வாங்கச்சென்றேன். அந்தக்கடையில் நடராஜா, யோகராசா, காசிப்பிள்ளை ஆகியோர் இருந்தார்கள். வெளிச்சம் போடப்பட்டிருந்தது. பீடியை வாங்கிக்கொண்டு நான்புறப்பட்டேன். காசிப்பிள்ளைதன்னையும் வீட்டில் கொண்டுபோய் விடும்படி கூறினர். காசிப்பிள்ளை சாடையாக குடித்திருந்தார். ஒருமாதிரி கதைத்துக் கொண்டிருந்தார். காசிப்பிள்ளையின் சைக்கிள் கடையில் இருந்தது. நான் சைக்கிளை எடுத்துச்சென்றேன் பியசேனுவும் எங்களுடன் வந்தார் கடையிலிருந்து கிழக்குப் பக்கமாக போனேம் அப்போது நடராசாவும், யோகராசாவும் பொல்லுடன் வந்தார்கள் நடராசா என்னை விலத்திச் சென்று இறந்தவரைப் பார்த்து என்னடா பேயா பொய் சொல்லிக்கொண்டு வாருய் என்று அடித்தார் நடராசா கையில் ஒரு பொல்லும் யோகராசா கையில் ஒரு பொல்லும் இருந்தது பின்னல் வந்த யோகராசா அடித்தார் மீண்டும் யோகராசா ஒருதடவை அடித்தார் நான் பயந்துவிட்டேன் சைக்கிளை போட்டுவிட்டு நின்றேன் உன்னையும் கொல்லுவேன் என்று எதிரிகள் என்னைத் துரத்திக் கொண்டுவந்தார்கள் பியசேன அடியோடு ஓடிவிட்டார் நான் தம்பையா வீட்டிற்குப்போனேன்

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## திருமலை ஹரிஜன யூனியன் சமர்ப்பித்த கோரிக்கைகள்

திருகோணமலை, வெள்ளி

இலங்கை ஹரிஜன யூனியன் தூதுக்குழு அதன் தலைவர் திரு பி சி பாலகிருஷ்ணன் தலைமையில் திருகோணமலை நகரசபைக்காரியாலயத்தில் சனிக்கிழமை காலை 10 மணிக்கு அந் நகரசபைத் தொழிலாளர்களின் குறைபாடுகளைப் போக்குவதற்கான விரிவான மகஜர் சமர்ப்பித்து திருமலை நகரசபைத் தலைவரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியது.

பிரஸ்தாப தூதுக்குழுவில் யூனியன் பொதுச் செயலாளர் திரு எஸ் சுந்தரராஜ் பொருளாளர் திரு எம். பலவாசம் திருமலைக் கிளையின் தலைவர் திரு வி. உடையான் செயலாளர் திரு ஜி மத்தியூ உட்பட நகரசபைத் தலைவருக்கு அனுசரணையாக சபையின் உபசெயலாளர் இலாகாக்களின் உயர் அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர்.

### கோரிக்கைகள்

காந்திநகர் சுண்டன்காடு ஆகிய இலயன் களிலுள்ள தொழிலாளர்களின் வீடுகள் திருத்தப்படல் வேண்டும்.

சுண்டங்காடு இலயனில் தொழிலாளர்களின் பாவனைக்குள்ள இடிந்து தகர்ந்த நிலையிலுள்ள கிணறு திருத்திக் கட்டப்படுவதற்கு சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு உத்தரவிடுக.

பெரியகடை (காந்திநகர்) இட்டலியன் கேம்ப் தொழிலாளர்களின் பாவனைக்கு குழாய் தண்ணீர் வசதி செய்து தரப்படல் வேண்டும்.

தொழிலாளர்கட்கு ஆண்டுதோறும் கொடுக்கப்படலம் யூனிபோர்ம் உரித்தானோர்க்கு உடனடியாக வழங்கப்படுவதற்கு ஆவன செய்க

1964லிருந்து 1969 வரை பல தொழிலாளர்கட்கு இன்னும் கொடுக்கப்படாமலிருக்கும் வீட்டு வாடகைப் பாக்கிப்பணம் விரைவில் அவர்கள் பெறுவதற்கு உகந்த நடவடிக்கை மேற்கொள்க.

தொழிலாளர்கள் செலுத்தும் சேமலாபநிதி அவர்கள் ஒவ்வொருவரினது சேமிப்புத்தொகையைக் காட்டும் வருடாந்தர கணக்குப்பட்டியல் அவர்கள் [illegible] டிய தெதியில் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்க.

ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக நிகழ்வுற்ற இப் பேட்டியின்போது மேற்காணும் கோரிக்கைகளை தொழிலாளர்கள் பெறுவதற்கு நியாயமான உரித்துடையோரென தக்க ஆதாரங்களுடன் தூதுக்குழு வலியுறுத்தி தெளிவாகக் கூறியது.

......

### உதவியமைச்சர் திறந்து வைப்பார்

முல்லைத்தீவு, வெள்ளி

வவுனியா கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பின் பேரில் வவுனியாத் தொகுதிக்கு அடுத்தமாதம் 10ம் திகதி விஜயம் செய்யும் உதவி கல்வி அமைச்சர் திரு. பி வை இடாவ முல்லைத்தீவில் புதிதாக உருவாக்கப்பட்ட முஸ்லீம் பாடசாலையைத் திறந்துவைப்பார். பின்னர் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தின் விஞ்ஞான கூடத்தைத் திறந்து வைப்பார் அதன்பின் அன்றைய பின்பகல் [illegible] வில் நடைபெறும் கட்சியின் பகிரங்கக் கூட்டத்தில் கலந்துகொள்ள வுள்ளார்.

## 'சமுதாய மறுமலர்ச்சிக்கு பத்திரிகைகள் சிறந்த கருவி'

மாவிட்டபுரம், வெள்ளி

'சமுதாயத்தின் பிரதிநிதிகள் எழுத்தாளனும் பேச்சாளனுமாகும். இருவரும் இணைந்து செயலாற்றி மக்களிடையே புதுக் கருத்துக்களைத் தெரிவித்து மறுமலர்ச்சியை ஏற்படுத்தவேண்டும்

இவ்வாறு 'சிவத்தமிழ்செல்வி' பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மாவை கம்பன் கலைக்கழக ஆதரவில் நடைபெற்ற 'சிலம்பொலி' திங்கள் ஏட்டின் கலைவிழாவில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினர்.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி திறந்தவெளியரங்கில் நடந்த இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'இன்று ஈழத்தில் எத்தனையோ பத்திரிகைகள் வெளிவந்துள்ளன. அவை கணக்கிட்டு விபரம் வெளியிடப்பட்டுள்ளது. 254 மாதப் பத்திரிகைளும், 95 இருமாதப் பத்திரிகைகளும் 74 வாரப்பத்திரிகைகளும் வெளிவந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. சென்ற 150 வருடங்களாக ஈழத்தில் பத்திரிகைகள் பெருகியுள்ளன. முற்காலத்தில் புராணங்கள், இலக்கிய நூல்கள் ஆதியவற்றை மக்கள் வாசித்து தமது அறிவைப் பெருக்குவதுடன் தமிழையும் வளர்த்து வந்தனர். இன்று இந்தமுறை எம்மத்தியில் இருந்து நீங்கி வருகின்றது ஆனல் இன்றுள்ள மக்கள் பத்திரிகை வாசித்தலாலும் சொற்பொழிவுகளை கேட்பதாலும் தமிழையும் கலைச்சாரத்தையும் வளர்க்கின்றனர் எனவே இன்றைய நிலையில் பத்திரிகைகள் சமுதாய மறுமலர்ச்சிக்கு நல்ல கருவியாக அமைந்துள்ளது.

பத்திரிகைகளை வெளியிடும்போது மக்கள் கருத்தை எப்படி அறிந்து சமூக சீர்திருத்தத்துக்கு உதவலாம் என்ற வரையறையுடன் பத்திரிகைகளை ஆரம்பிக்கவேண்டும். இந்த வரையறையில் இருந்து வரம்பு கடவாமல் ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டும். அப்போதுதான் மக்கள் பயன் அடைவதுடன் பத்திரிகையும் சிறப்புறும்.

எழுத்தாளன் நூல்களைமட்டும் அறிந்தால் பூரணமான எழுத்தாளனுகமுடியாது. பூரண எழுத்தாளனுக சமுதாயத்தைப்பற்றியும் அறியவேண்டும். அப்போதுதான் சமுதாயம் அவனது படைப்புக்களை ஏற்கும்.

வட்டார வித்தியாதரிசி திரு: கே. சோமசுந்தரம் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ்மொழியின் சிறப்பு தொன்மையானது. தமிழில் இயற்றமிழுக்கு கம்பர் யாத்தநூல் உட்பட எத்தனையோ காவியங்கள் உள்ளன. ஆனல் நாடகத்துறையில் ஒன்றுமில்லை வடமொழியில் காளிதாசரும், ஆங்கிலத்தில் பெர்னுட்சாவும்போன்ற நாடகமேதைகள் எம் தமிழில் இல்லை. இந்தக்குறையைத் தீர்க்கவேண்டியது அவசியமாகும் என்ருர்

மகாஜனக்கல்லூரி அதிபர் திரு மா. மகாதேவன் பேசுகையில் கூறியதாவது:-

'இன்று ஈழத்தில் ஏராளமான பத்திரிகைகள் வெளிவந்துள்ளன. இப்பத்திரிகைகள் மூலம் தமிழை வளர்க்கும் நோக்குடன் இயங்கவேண்டும்.

இதுகாலம்வரை எமது நாட்டில் இலக்கியத்துறை வளர்ச்சியை முக்வைத்து தமிழகத்தில் இருந்து சஞ்சிகைகள் இறக்குமதி செய்யப்பட்டது இன்று அரசியல் பொருளாதாரத்தில் நாம் விடுதலை பெற்றது போல இலக்கியத்துறையில் விடிவு பெற புதிய நூல்கள் உதவும் என்ருர்

பண்டிதர் இ. நமசிவாயம் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, புலவர் தமிழ்மாறன் உட்படப் பலர் உரையாற்றினர்கள். சங்கத்தலைவர் ஆ கு. சிவபாலசுந்தரம் பிள்ளை நன்றி கூறினர்.

## சந்தேக நபர்கள் ஆஜர் செய்யப்படவில்லை

யாழ்ப்பாணம், சனி

துரையப்பாவின் காருக்கு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது சம்பந்தமாக நேற்று யாழ் மாஜிஸ்திரேட் திரு கொலின் மென்டிஸ் முன்னிலையில விசாரணை நடந்தது சந்தேக நபர்கள் இருவரும் நேற்று கோர்ட்டில் ஆஜர் செய்யப்படவில்லை. கோர்ட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் ஏராளமான இளைஞர்கள் திரண்டுநின்றனர்.

சந்தேக நபர்கள் சார்பில் அட்வக்கேட் எஸ், ஸ்ரீனிவாசன் புரக்டர் எஸ், அருணசலத்தின் அனுசரணையுடன் ஆஜரானர் மாஜிஸ்திரேட் விசாரணையை அடுத்தமாதம் 10-ம் திகதிவரை ஒத்திவைத்தார். பொலிசார் இச்சம்பவம் சம்பந்தமாக மேலும் ஒரு சந்தேக நபரைத் தேடி வருகின்றனர்.

### முல்லைத்தீவில் உள்ளூராட்சி ஆணையாளர்

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு பட்டின சபைக்கு விஜயம் செய்தார் உள்ளூராட்சி ஆணையாளர் திரு. நீல்டீ அல்விஸ்.

ஆணையாளரையும் அவருடன் விஜயம் செய்த வவுனியா ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சே மா. செல்லத்தம்பு, வவுனியா உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரை முல்லைத்தீவு ப ச தலைவர் திரு. ம சூ. வஸ்தியாம்பிள்ளை வரவேற்றார்

பின்பு உள்ளூராட்சி ஆணையாளர் திரு நீல் டீ அல்விஸ் முல்லைத்தீவு பட்டின சபையின் காரியாலயம், மின்சார நிலையம் ஆகியவற்றைப் பார்வையிட்டார்

அதன்பின் நடந்த கூட்டத்தில் வவுனியா எம். பி திரு சே. மா செல்லத்தம்பு முக்கிய தேவைகளான குழாய்நீர் விநியோகம் சேரி ஒழிப்புத்திட்டம், மின்சார அபிவிருத்தி பற்றி எடுத்துக்கூறினர். இது பற்றி ப ச தலைவர் திரு ம சூ வஸ்தியாம்பிள்ளையும் எடுத்துரைத்தார்.

மேற்படி விஷயங்களைத் [illegible] வேற்றி வைப்பதாக உள்ளூராட்சி ஆணையாளர் உறுதி கூறினர்.

## கடந்த அரசாங்கத்தை குறை கூறுவதில் பலனில்லை

—உதவியமைச்சர்

வேருவலை, வெள்ளி

'தற்போது நாட்டை எதிர் நோக்கியிருக்கும் பொருளாதாரகுறைபாட்டுக்கு கடந்த அரசாங்கத்தையோ அல்லது வேறு எவரையுமோ குறை கூறுவதில் பிரயோசனமில்லை இது வீணனது. இவ்விதம் செய்வதினல் தற்போதுள்ள பிரச்னைக்குத் தீர்வுகாணவும் முடியாது தற்போதுள்ள நிலையில் சகலரும்தமது அரசியல் வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு நாட்டு நலன் கருதி ஒன்றுபட்டு செயற்படவேண்டும்'

இவ்வாறு அரியவன்ச வித்தியாலயத் திறப்பு விழாவில் உரையாற்றிய வர்த்தக அமைச்சரின் ஆட்சிமன்றக் காரியதரிசி திரு பி. ஆர். இரத்னயக்கா கூறினர்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தற்போது நாடு இக்கட்டான நிலையிலுள்ளது. இந்நிலையில வேறுநாடுகள் நாம் முன்பு கேட்ட பணக்கைக் கடனுகத்தருவதற்கு விரும்பவில்லை. எனவே நாம் வெளிநாட்டினரின் உதவியைப் பெறுவதைவிட்டு நாட்டின் நலன் கருதி சகலரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்.

மேலும் இப்போது மக்கள் வங்கியிடம் பெரிதும் கடன்பட்டுள்ளது அதற்கு ஒவ்வொரு மாதமும் ஒரு லட்சத்து முப்பதினயிரம் ரூபாவுக்கு மேல் நஷ் மேற்படுகிறது. தேசியமயசேவைகளில் மட்டுமன்றி அரசாங்க இலாகாக்களிலுமுள்ள அநேகமான ஊழியர்கள் நேர்மையற்றவர்களாகவுள்ளனர். குறுகிய காலத்தில் இக்குறைகள் யாவும் நீக்கப்படவேண்டும்

மக்கள் அரசாங்கம் தான் ஏற்கனவே திட்டமிட்டபடி செயலாற்றியே தீரும். செயலாற்றும் பொழுது எந்தவித பிரச்னைகள் தடைகள் ஏற்பட்டாலும் அரசாங்கம் தனது முயற்சியைக் கைவிடாது ஜனநாயக சோஷலிசத்தை நோக்கிச் செல்லும் பயணத்தை எவராலும் தடைசெய்யவியலாது

வண தெல்வதத ஈரமபால தேரோ, திருவாளர்கள் எம் சி கருணதிலகா, எம் பெர்னுண்டோ உட்படப் பலர் உரையாற்றினர்

......

### வர்த்தக மாணவர் மன்றம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மத்தியகல்லூரி வர்த்தகமாணவர்மன்ற வருடாந்தக் கூட்டம் ப. சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றபோது முன்னைநாள் அதிபராயிருந்து காலஞ்சென்ற திரு. ஏ. ஈ. தம்பருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது புது ஆண்டிற்கான உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ். ரவீந்திரன், உபதலைவர்: வை. கணேசநாதன், செயலாளர்: ச மகேந்திரன், உபசெயலாளர்: மு நாகேந்திரன். பொருளாளர்: மா. இரத்தினவடிவேல், பத்திராதிபர்: ச. இராமலிங்கம்.

ஏழு பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# “ஜனநாயகத்தைப் பாதுகாக்கவேண்டும்”

யாழ்ப்பாணம், சனி

சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டால் தொழிற் சங்கங்கள் நசுக்கப்பட்டுவிடும். இடது சாரிகளானாலும் சரி வலது சாரிகளானாலும் சரி சர்வாதிகார அரசாங்கத்தை நிறுவ முயற்சித்தால் தொழிற்சங்கங்கள் முழுமூச்சாக எதிர்த்து இந்நாட்டில் ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கத்தையே நாம் ஆதரிக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நேற்று நடந்த தபால் தந்தி ஊழியர் சங்க யாழ் கிளையின் வருடாந்த கூட்டத்தில் தாய் சங்க செயலாளர் திரு எல் டி ஜி விக்ரமசிங்கா பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

கிளைத் தலைவர் திரு எஸ் பீ ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு விக்ரமசிங்கா மேலும் கூறியதாவது சர்வாதிகார ஆட்சியில் இப்படியாக நாங்கள் சுதந்திரமாக பேசக்கூடிய நிலைமை கூட இருக்காது. அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும்படி தொழிற்சங்கங்களுக்கு பிரதமர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார் இன்றைய நிலையில் நாம் அரசாங்கத்தை ஆதரித்து தீயசக்திகளின் முயற்சிகளை முறியடிக்க வேண்டும் ஜனநாயக ஆட்சியை பாதுகாக்கவேண்டும்.

ஆலோசனைச் சபைகளின் ஆலோசனைகள் இதுவரை ஏற்கப்படவில்லை. அப்படி ஏற்கப்பட்டிருந்தால் உலகிலேயே எங்கள் இலாகா தான் முன்னணியிலிருக்கும் ஆலோசனைச்சபைகளில் சங்க உறுப்பினர்கள் இடம் பெறவேண்டும் அப்பொழுதுதான் நல்ல ஆலோசனைகளை வழங்கமுடியும். சங்க உறுப்பினர்களல்லாத வெளியார் ஆலோசனைசபைகளில் இடம்பெறுவதால் எங்களுக்குத்தான் நஷ்டமாகும்

சிங்கள நிபந்தனையால் தமிழ் ஊழியர்கள் பாதிக்கப்பட்டுவருகிறார்கள். தமிழ் மொழிமூலந்தான் அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றார்கள். சிங்களத் தேர்ச்சி பெறுவதற்கு 3 வருடகால அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த 3 வருடகாலத்தில் சிங்களத்தில் போதியளவு தேர்ச்சியடைந்துவிட முடியுமா என்பதை சிந்தித்துப்பார்க்கவேண்டும் நாம் எல்லோரும் ஒன்றுபட்டால்தான் எமதுகோரிக்கைகளைப் பெறமுடியும்.

# ‘வர்த்தகக் கல்வி முக்கியத்துவம் வாய்ந்தது’

— வடபகுதி வித்தியாதிபதி

யாழ்ப்பாணம், சனி

“இன்று வர்த்தகக் கல்வி இலங்கையில் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக விளங்குகின்றது. இந்தக் கல்வியை நல்ல முறையில் மாணவர்களுக்குப் பயிற்றுவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது”

இவ்வாறு வடமாநில வித்தியாதிபதி டபிள்யூ. டி. சிமராதுங்க யாழ்ப்பாணம் சென். மேரீஸ் பாடசாலையில் வர்த்தக ஆசிரியர்களுக்கான கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

“நினைவுறுத்தற் கழகங்கள் முதலியவற்றை இலங்கை அரசாங்கம் தனது செலவிலேயே ஆசிரியர்களுக்காக ஒழுங்கு செய்து நடாத்துகின்றது. ஆனால் இங்கிலாந்து போன்ற பிறநாடுகளில் ஆசிரியர்கள் தமது பணத்தைக் கொடுத்தே இப்படியான கருத்தரங்குகளை ஒழுங்கு செய்கின்றனர். பதவி உயர்வு முதல்யவற்றிற்கான நேர்முகப் பரீட்சைக்கு செல்லும் போது இதுபோன்ற கருத்தரங்குகள் நினைவுறுத்தற் கழகங்கள் ஆகியவற்றுக்கு சமூகமளித்தமை பற்றிய விஷயங்கள் கேட்கப்பட்டு அவற்றிற்கும் புள்ளிகள் இடப்படுகின்றன. ஆகையால் இது போன்ற கருத்தரங்குகளை நீங்கள் தவறவிடக் கூடாது. பாடசாலையில் உங்கள்கடமையை ஒழுங்காகவும் மாணவர்களின் வளர்ச்சிக்காகவும் உங்களாலான சிறந்தசேவையை நீங்கள் செய்ய முன்வர வேண்டும். க பொ த சாதாரணதர உயர்தர வகுப்புகளில் நீங்கள் கலந்துரையாடல் முறையை அடிக்கடி கடைப்பிடிப்பதனால் மாணவரின் அறிவை மேலும் வளர்க்கவும் அவர்களைச் சிந்திக்கச் செய்யவும் உதவுகிறீர்கள். பாடங்களைக் கற்பிக்கும் போது பாடக்குறிப்புக்கள் கற்பித்தற் சாதனங்கள் இருக்கவேண்டியது அவசியம். இவைகள் இல்லாத ஆசிரியர்கள் கட்டாயம் கண்டிக்கப்படுவார்கள்.

கருத்தரங்கின் விரிவுரை

(7-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் விசாரணை

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறை நகைவியாபாரி கொலை வழக்கு திரும்பவும் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணை செய்யப்படவேண்டும் என அட்டோர்னி ஜெனரலால் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

இவ்வழக்கு அல்வாய்தெற்கைச் சேர்ந்த ச இராமச்சந்திரன் நெல்லியடியைச் சேர்ந்த செ நடராசா ஆகிய இருவரும் 68-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 3ந்திகதி பருத்தித்துறை பிரதான வீதியைச் சேர்ந்த நகை வியாபாரியான எம். எம். சுல்தான் மொகதீன் என்பவரை சதிசெய்து கொலை செய்ததாக கொழும்பு இரகசியப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்டது.

முன்னர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கோட்டில் விசாரணை செய்யப்பட்டு எதிரிகள் இருவரும் சுப்ரீம் கோட்டிற்கு பாரப்படுத்தப்பட்டிருந்தனர்.

1-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு சி தாமோதரம்பிள்ளையும் 2-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு என் நடராசவும் ஆஜராயிருந்தனர்.

——

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் கிராமசபை அபிவிருத்திச் சபையினரால் நடாத்தப்படும் பால் பண்ணை அபிவிருத்தி உபகுழுக் கூட்டம் சுழிபுரம் கிராமசபை மண்டபத்தில் சமுத் தலைவர் திரு இ சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது பால் கொள்வனவு விற்பனவு பசுவளர்த்தில் மேய்ச்சல் நிலம் போன்ற விஷயங்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டன.

# ‘நாவலர் இன்றிருந்தால் ...’

யாழ்ப்பாணம், சனி

தமிழகத்தில் அரசாங்கம் மாணவர்களுக்கு மதத்தைக் கட்டாயமாகப் போதிப்பது இல்லை இலங்கையில் இது கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது. இதைக் குறித்து நாவலர் பெருமான் இன்றைக்கு இருந்திருந் தால் பெருமைப்பட்டிருப்பார்.

இன்றைக்கு மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம் அமைதி என்பன நிலைநாட்டப்பட்டால்தான் எதிர்கால சந்ததியினர் சிறப்பு அடைய முடியும்‘ என சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கோயம் புத்தூர் முன்னாள் மாவட்ட நீதிபதி அருட்பாவள்ளல் ஸ்ரீ கிரிதாரி பிரசாத் பேசுகையில் கூறினார்.

உலகில் நூறுகோடி மக்கள் மதநம்பிக்கை அற்றவர்களாக வாழ்கின்றனர் என்றும் மீதியில் மூன்றில் இரண்டுபேர்தான் மதத்தைக் கைக்கொள்ளுகின்றனர் என்றும் அவர் சொன்னார்.

கல்லூரி பதில் அதிபர் க சி சிவகுமாரன் தலைமை தாங்கினார்.

——

## பங்குனி உத்தரவிழா

யாழ்ப்பாணம், சனி

திருக்கேதீச்சர ஆலயம் 13-வது ஆண்டு பங்குனி உத்தரவிழா அடுத்தமாதம் ஒன்பதாம் திகதி பங்குனி உத்தரதினத்தன்று நடைபெறவிருக்கிறது.

அன்று மகாசங்காபிஷேகம், விசேட ஆராதனைகள், இரவு திருக்கல்யாணம் திருஉலாக் காட்சியும் வேறுகலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். இவ்விழாவையொட்டி யாத்திரிகர்களுக்கு விசேஷ பஸ்சேவை ஒழுங்கு செய்யப்படும்.

## கூட்டுறவுச் சங்கங்கள்

அம்பன் வெள்ளி

யாழ்ப்பாணம் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் பகுதியில் புதிதாக உடுப்பிட்டி திருநெல்வேலி யாழ்ப்பாணம், புலோலி, வேலணை ப. நோ. கூ. சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இம்மாதம் பதிவு செய்யப்படவிருக்கும் சங்கங்களாவன:

ஊர்காவற்றுறை புங்குடுதீவு, காரைநகர், பருத்தித்துறை மானிப்பாய்

——

## யாழ் வடிவான அலங்காரத்தட்டி

பாண்டிருப்பு, வெள்ளி

காரைதீவு கிராமாட்சி மன்றப் பணிமனையின் முன்னால் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் சிலைக்குமேல் மகரயாழ் வடிவான அலங்காரத் தட்டி அமைக்கப்படஉள்ளது இதற்கான முயற்சிகளை கி ச தலைவர் டாக்டர் பரசுராமன் மேற்கொள்கிறார்


# வெள்ளை ஆடைகளை எவ்வளவுதான் கழுவினலும் பரிபூரண வெண்மையை அடையமுடியாது. உங்களுக்குத் தேவையானது

# றெபின் நீலம்!




சலவைத்தூளும் சவர்க்காரமும் வெள்ளை ஆடைகளைச் சுத்தமாக்குவது உண்மைதான். ஆனல் ஆடைகளை எவ்வளவுதான் கழுவினலும் அது உண்மையான வெண்மையைத் தந்துவிடாது — இங்குதான் உங்களுக்கு றெபின் நீலம் தேவை.

றெபின் நீலம் கலப்பில்லாத சலவை நீலம். அது வெள்ளை ஆடைகளைப் பளபளப்பாக்கச் செய்கிறது. வெண்மை இழந்த ஆடைகளுக்கு வெண்மையை மீட்டுத் தருகிறது.

உங்கள் ஆடைகளை வழமைபோல் சலவை செய்யுங்கள். ஆனல் முடிவில் றெபின் நீலத்தில் தோய்த்தெடுக்க மறவாதீர்கள். ஆடைகளுக்கு வெண்மையையும், பளபளப்பையும் கொடுப்பதற்கு நிச்சயமான சுலபமான வழி இதுவே!

**ஆடைகள் வெண்மையாகப் பளபளப் பாகப் பிரகாசிக்க றெபின் நீலம் பாவியுங்கள்.**

ஓர் ரெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.

GRANT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பலன் கருதாப் பணியே நம்மவரை உயர்த்தியது'

சுழிபுரம், வெள்ளி

பலன் கருதாப் பணிகளாலேயே நம் மூதாதையர்கள் சிறந்திருந்தனர். நாமின்று அவற்றை துறந்துள்ளமையால் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. இன்று வாலிபர்கள் மத்தியில் பல புதிய பிரச்னைகள் உருவாகியுள்ளன. வாலிபர்கள், தத்தமது கடமைகளை உரியகாலத்தில் செய்ய வேண்டும். கல்வியைக் கற்கும் காலத்தே கற்கவேண்டும். கூட்டாகவோ அன்றி தனித்தோ பொருளாதாரத்தை கட்டி எழுப்பவேண்டும். அப்போதுதான் கிராமமும் நாமும் முன்னேறலாம்.

இவ்வாறு பண்ணாகம் ஸ்ரீமுருகன் கிராமமுன்னேற்ற, சனசமூகசேவா சங்க வருடாந்தப்பொதுக்கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் பேசும்போது குறிப்பிட்டார். சங்கத்தலைவர் திரு. இ. சிவப்பிரகாசம் தலைமை வகித்தார். திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில், தமிழர் விவசாய குடியேற்றத்திட்டங்களில் அதிக கவனம் செலுத்தவேண்டும். வாலிபர்கள் வீணே அரட்டை அடிப்பதைப் போக்கவேண்டும். காலம் பொன்போன்றது. நாமும் வாழ்ந்து மற்றவர்களும் வாழவழிகாட்ட வேண்டும். புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவும் நடைபெற்றது.

......

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

உரிய சம்பளம் பெறாத பயிற்றப்பட்ட பட்டதாரிகள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த வாரம் சங்கக் காரியாலயத்தில் சங்கத் தலைவர் திரு. ஜோஸப் தலைமையில் நடைபெற்றபோது புதிய ஆண்டுக்கான உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றது. விபரம் வருமாறு

தலைவர் திரு எஸ் சந்திரவேலு, செயலாளர் திரு. எம் எஸ் ஏ ரஹீம், பொருளாளர் திரு. ஏ. முதலித்தம்பி, உப தலைவர்கள் திரு ஆர் ஜோசப், திருமதி சொர்ணம்பாள் நல்லையா, உப காரியதரிசி திரு. பி சுப்பிரமணியம், உப தனாதிகாரி வீ பொன்னபலம். செயற்குழு உறுப்பினர்களாக மேலும் ஒன்பது பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

யாழ்ப்பாணம், சனி

யாழ். உளவியல் சங்கத்தின் வருடாந்தக்கூட்டம் பரியோவான் கல்லூரியில் நடந்தபோது பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. பூரணம்பிள்ளை உபதலைவர்கள்: டாக்டர் கே. கதிர்காமசேகரம் முதலியார் செ. முத்துத்தம்பி திரு. எஸ். எம். ஜே. லூயிஸ் செயலாளர்: திரு சிகுமாரசாமி, உதவிச்செயலாளர்: திரு. கே. மகேசன் திரு. எஸ். ஆர். குமரேசன் செல்வி புஷ்பம் செல்வி டனியலா ஆகியோர் காரியக்குழுவினராக தெரியப்பட்டனர்.

0 0 0

முல்லைத்தீவு, வெள்ளி

வவனியா சூசைப்பிள்ளையார்குளம் றேமான் சனசமூக நிலையத்தின் புனருத்தாரண கூட்டம் வவனியா உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கந்தோரில் நடைபெற்றபோது பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: திரு. ஜீ. செல்வராஜா உபதலைவர் திரு என் கந்தவனம் காரியதரிசி: திரு வி வி கருணாகரன் தனாதிகாரி: ஜீ கிருஷ்ணபிள்ளை மற்றும் 17 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

சங்கானை, வெள்ளி

கைதடி குருடர் செவிடர் பாடசாலை சாரணீய இயக்க நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

காப்பாளர்: திரு. வே சச்சிதானந்தன் (யாழ் மாவட்ட திரிசாரணர் இயக்க உதவிஆணையாளர்), காரியதரிசி: திரு எஸ் சிங்கராசா, தனாதிகாரி: திரு பீ பாலேந்திரன். சேவைக்குழுபொறுப்பாளர்: திரு ஏ ஏகாம்பரநாதன், ஏழுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

......

## விசாரணைக் குழு

மட்டக்களப்பு, வெள்ளி

ஊழியர் நியமனங்கள், பதவி உயர்வுகள் இடமாற்றங்கள் ஆகியவைகுறித்து விசாரணை செய்வதற்காக மட்டக்களப்பு மாநகரசபையின் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட விசாரணைக்குழு ஒன்று அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளது

மட்டக்களப்பு மாநகர சபையின் தற்போதைய புதிய நிர்வாகத்தால் வழங்கப்பட்ட நியமனங்கள் குறித்து வரியிறுப்பாளர்களிடையே அதிருப்தி நிலவியதைத் தொடர்ந்தே மேற்படி விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. இப்புதிய சூழ்நிலையால் நியமன விஷயத்தில் மேயருக்கு இருந்து வந்த தனிப்பட்ட அதிகாரம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும்

கோட்டை, வெள்ளி

நவீன விவசாயக்கருவிகள் இருந்தபோதிலும் விவசாயிகள் ஏர்கட்டி உழும் முறையையே தொடர்ந்து செய்து வருவதை நீக்கி நவீனகருவிகளை உபயோகித்து அதிக விளைச்சலை உண்டாக்கவேண்டுமெனவும் புதிய கருவிகளை உபயோகிக்க ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டுமெனவும் விவசாய இலாகா தீர்மானித்துள்ளது

விளைச்சலை அதிகரிக்கபுதிய விவசாய முறைகளை மக்கள் கடைப்பிடிக்க ஊக்கமளிப்பதெனவும் இலங்கைப்பல்கலைகழக பூகர்ப்ப இலாகாவின் உதவியுடன் நாடு முழுவதிலும் காணிக்கமிஷனர் மூலம் பரிசீலனை செய்வதெனவும் அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

## மாவட்ட ஆலோசனைக் குழுக்கள்

கோட்டை, வெள்ளி

மீனவர்களின் அத்தியாவசிய தேவைகளைச் சிறந்த முறையில் கிடைக்கச்செய்வதற்காக மீன்பிடி அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்ஷ மாவட்ட ஆலோசனைக் குழுக்களை நியமிக்கவுள்ளார்.

இக்குழுக்கள் படகுவிநியோக முறைகளைச் சீர்படுத்தல், தண்ணீர், வீடு, சுகாதாரம், கல்விபோன்ற மீனவர்களின் அத்தியாவசிய தேவைகளை தகுந்த முறையில் பெறச்செய்ய உதவியளிக்குமெனவும் தெரியவந்துள்ளது.

## விளையாட்டுவிழா

சுழிபுரம், சனி

வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடை[illegible] கலந்துகொள்ளவுள்ளார்.

# இன்றைய பலன்

மேஷம்- நலன்தரும் சம்பவங்கள் நடக்கும். நலிவு சொல்லாமல் பறக்கும். இல்லறத்தில் இனிமை பிறக்கும். பொன்னுள்

ரிஷபம்- குருவின் ஆசியுடன் குறிக்கோளும்வெற்றி காணும். குன்றெனநிமிர்ந்து நிற்பீர் குவிந்திடும் புகழும்

மிதுனம்- அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும். ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும். படித்தவர்கள் ஆதரவுமுண்டு.

கடகம்- கன்னல்போல் வாழ்வு. கருத்தினில் காதல் மோதும். மின்னல்போல் மறையும் இன்றே வாட்டிடும் பிணியும்தானே.

சிம்மம்- புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். புதிய அனுபவங்கள் கிடைக்கும். குறிக்கோளில் வெற்றியுண்டு. ஆனந்தநிலை.

கன்னி- இல்லத்தில் இனிமை மலரும். உறவினர்கள் கூடுவர், உல்லாசமான பொழுதுபோக்கும் உண்டு.

துலாம்- நண்பர்களுடன் கருத்துவேற்றுமை உருவாகும். வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக்கொள்ளவேண்டாம்.

விருட்சிகம்- கலைஞர்கள் போற்றப்படுவர். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பும் கிடைக்கலாம். குருவின் ஆசி தாராளமாகக் கிடைக்கும்.

தனுசு- புதிய வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினால் இன்று துரித முன்னேற்றம் கிடைக்கலாம்.

மகரம்- இளமை நினைவுகள் நிழலாட்டம்போடும். காதல்களை தாக்கும். கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள், பாலுணர்ச்சி மேலிடும்.

கும்பம்- சிந்தனையில் குழப்பநிலை உருவாகும். விவசாயத்துறை மூலம் நஷ்டமேற்படலாம், அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மீனம்- சிறிய விடயத்திற்குக் கூட அதிக ஆத்திரம் தோன்றக்கூடும். மற்றவர்களின் குறுக்குவழித் தலையீடும் இடம்பெறும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 27—3—7[illegible]

(செய்திகள்: காலை 6-45. பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம். 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344மீ அன் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-30 கல்விஒலிபரப்பு, 4 45 சங்கமம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்கண்டுபிடிப்புகள்.

இரவு 6-15 மெல்லிசை, 7-00 ஞானமஞ்சரி, 7-15 வாத்தியஇசை, 7-45 சிறுகதை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்கேட்டவை. 10-30 செய்தித் தொகுப்பு.

புதுவருடத்துக்கு

# 2 வார பங்கீட்டரிசியும் ஒன்றுகக் கிடைக்கும்

அம்பன், வெள்ளி

அடுத்தமாதம் 5-ம் திகதிக்கும் 18-ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்திற்குள் 5 விடுமுறை நாட்கள் வருவதாலும் புதுவருடப் பிறப்பு பண்டிகையை முன்னிட்டும் இரண்டு கிழமைக்குரிய பங்கீட்டு அரிசியை அடுத்தமாதம் 5-ம் திகதி சமாசங்களில் பெற்று 18-ம் திகதி வரை 60, 61, 62, 63-ம் இலக்க கூப்பன்புள்ளிகளுக்கு பங்கீட்டரிசியை பாவனையாளர்களுக்கு விநியோகிக்கும்படி உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி வடபகுதியிலுள்ள எல்லாப் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உத்தரவுபெற்ற வியாபாரிகளுக்கும் சுற்றுநிருபம்மூலம் தெரிவித்துள்ளார்.

# 'கருத்தின் அடிப்படையே இலக்கிய உருப்பெறுவது'

வெள்ளவத்தை, வெள்ளி

"இலக்கியம், கலை என்பதெல்லாம் ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் அமைகின்றன. எந்த ஒரு கவிஞனும் கருத்தில்லாமல் கவிதை எழுதமாட்டான். கலையோடு அமைவதுதான் கருத்து. கருத்து வெறும் பிரசாரமாக இருக்கக்கூடாது. சில குறிப்பிட்ட விமர்சனக் கருத்துக்களை அளவுகோலாகக் கொண்டு அவசரப்பட்டு எதையும் முடிவு கட்டக்கூடாது. இளைஞர்கள் எதையும் ஆராய்ந்து முடிவுகட்டவேண்டும்"

இவ்வாறு பிரபல கவிஞர் மஹாகவி கொழும்பு புறக்கோட்டை மலிபன்வீதியில்நடைபெற்ற 'இலக்கிய நண்பர்கள் சந்திப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நெல்லை க. பேரன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. கவிஞர் மஹாகவி தொடர்ந்து கூறியதாவது. எமது கவிதைப் புத்தகங்களுக்கு நல்ல விளம்பரம் இருந்தால் நிச்சயம் இலங்கையில் இரண்டாயிரம் பிரதிகள் விற்பனை செய்ய முடியும். எமது மக்களிடம் ஆதரவுதரும் மனப்பான்மைவேண்டும் என்றார்.

திரு. ஆ. குருசாமி பேசுகையில் 'ஈழத்து நூல்களை வாங்குவதற்கென்று தனியாக நிதி ஒதுக்கவேண்டும். என்றார்.

திரு. டொமினிக் ஜீவா பேசுகையில், தெரிவித்தவை அரசியல் வாதிகளினால் கட்டி எழுப்பமுடியாத இன ஒற்றுமையை எழுத்தாளர்கள்தான் கட்டியெழுப்பமுடியும்.

பதுளை மூ. நித்தியானந்தன். திரு குப்பிழான் சண்முகம் இமையவன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

......

## திருவள்ளுவர் முன்னணிக்கழக வெள்ளிவிழா

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மடம் வீதி திருவள்ளுவர் முன்னணிக் கழகம் அதன் 25 ஆண்டு வெள்ளி விழாவை மிகப்பரந்த அடிப்படையில் கொண்டாடுவதென கழகத் தலைவர் திரு. கிருஷ்ணர் தலைமையில் கூடிய விசேஷ கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜூன் மாதம் 6, 7, 8-ம் திகதிகளில் 3 தினங்கள் விழாவைக்கொண்டாடுவதென்றும் முதல்நாள் சைக்கிள் ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி, அஞ்சல் ஓட்டப்போட்டி முதலியன இடம்பெறுமென்றும் 3-ம் நாள் விழாவில் விநோதஇசைப்போட்டி, பகிரங்கப் பொதுக்கூட்டம், பரிசளிப்பு முதலியன நடைபெறுமென்றும் தீர்மானிக்கப்பட்டதுடன் 2-ம் நாள் விழாவை இலக்கிய விழாவாக நடத்துவதென்றும் இலக்கிய விழாவில் கருத்தரங்கு, கவியரங்கு, பட்டிமன்றம் முதலியனவும் நாடகப்போட்டியும் இடம்பெறுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. சில அமைச்சர்களையும் எம். பி.க்களையும் விழாவுக்கு அழைப்பதென முடிவு செய்யப்பட்டது. விழாவுக்கான ஏற்பாடுகளை திரு கிருஷ்ணர் கவனித்து வருகிறார்.

## விளையாட்டுப் போட்டி

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப்போட்டி இம்மாதம் 31ம் திகதி மேற்படி வித்தியாலய அதிபர் திரு எஸ். முத்தையா தலைமையில் நடைபெறவுள்ளது. வவனியா ஆட்சிமன்ற உறுப்பினர் திரு சே மா செல்லத்தம்பு முல்லைத்தீவுபிரிவுக்காரியாதிகாரி திரு சொ கணேசநாதன், முல்லைத்தீவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு டபிள்யு ஆர் அருளையா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்கின்றனர் ——

## சொற்பொழிவு

அனுராதபுரம், சனி

நாளை (28-3-71) சமயப் பிரசாரகரும் கோயமுத்தூர் முன்னாள் கௌரவ நீதிபதியுமான திரு. நா கிரிதாரி பிரசாத் ஸ்ரீ கதிரேசன் ஆலய மண்டபத்தில் சமயச் சொற்பொழிவாற்றுவகர்.

......

## சுருட்டுத் தொழிலாளர் சங்கம் தீர்மானம்

அரியாலை, சனி

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் சங்கத்தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் தலைமையில் கூடியபொழுது புதுவருடத்துக்குரிய புதிய சந்தாவை வசூலிப்பது என்றும் சேமலாபநிதி வழங்காத சுருட்டுக் கொம்பனிகளுக்கு சென்றுஉடனடியாக தொழிலாளருக்கு சேமலாபநிதி கட்டும்படி முதலாளிமார்களை வேண்டுவது என்றும் சேமலாபநிதி விடயமாக தொழில் கந்தோர் ஊழியர்களுக்கு உதவி செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது ......

## வர்த்தக ...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யாளர்களாக யாழ். பல்தொழில் நுட்ப நிலைய அதிபர் கே. சிவபாலன், கொழும்பு தொழில் நுட்பக் கல்வி வர்த்தகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு எஸ். மாணிக்கவாசகர், பலாலி ஆசிரியர் கலாசாலை வர்த்தகத்துறை விரிவுரையாளர் திரு. எஸ் ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட வர்த்தக வித்தியாதிகாரி திரு வே அழகேசன் இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்திருந்தார். நூற்றுக்கு அதிகமான வர்த்தக ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசவிரோதச் செயல்கள்: இதுவரை 300 பேர் கைது!

கொழும்பு, வெள்ளி

நாட்டில் தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக்கருதப்பட்டுக் கைது செய்யப்பட்டவர் தொகை ஏறக்குறைய 300 ஆகும் கடந்த மூன்று நாட்களாகப் பொலிசார் நாட்டின் பல பகுதிகளிலும் தீவிர புலன் விசாரணை செய்து வருகின்றனர் இத்தகவலை தகவல் பகுதிப்பணிப்பாளர் அமுனுஹம தெரிவித்தார்.

இம்மாதம் 22-ம் திகதி பத்தேகமப்பகுதி ஒன்றில் வீடொன்றைப் பொலிசார் சோதனையிட்டதாக அங்கு 45வெடிகுண்டுகள் 65டைனமைற் மற்றும் கைக்குண்டு செய்வதற்குரிய பொருட்கள் அசிற் ஆகியன கண்டு பிடிக்கப்பட்டது. இதுசம்பந்தமாக வீட்டுச்சொந்தக்காரர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கோகலைப்பகுதியில் நாசகாரவேலைகளில் ஈடுபடுவதாகக்கருதப்படுபவர்கள் இருக்கும் 13 வீடுகளைப் பொலிசார் சோதனையிட்டனர். அங்கு கைக்குண்டுகள் அவற்றைக்தயாரிப்பதற்கான பொருட்கள் இருக்கக்காணப்பட்டன 2கொலிலர் உட்படப் 10 பேரைப் பொலிசார் கைது செய்தனர் பேராதனைப் பல்கலைக்கழக விடுதியிலுள்ள சமையல்காரர் ஒருவர் 10 அங்குல நீளமான 40 கிறிஸ்கத்திகள் செய்துதருமாறு கேட்டதாக அக்கொல்லர் பொலிசாரிடம் தெரிவித்துள்ளனர்.

பெலியாஹொடபொலிஸ் பகுதியிலுள்ள கொன்ஹென என்னும் ஓர் இடத்தில் 1000 டைனமைற் 300 துப்பாக்கி ரவைகள் 1036 வெடிகுண்டுகள், 2200 ரின் வெடிமருந்துகள் 180 ருத்தல் துப்பாக்கிப்பவுடர்கள். 11ருத்தல் கெந்தகமுள்ள சாக்கு ஆகியன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கண்டிப்பகுதியிலுள்ள உடவளப்பகுதி ஒன்றில் 44 கைக்குண்டுகள் 24 துப்பாக்கி ரவைகள், 15 சாக்குகளில் கைக்குண்டு செய்வதற்கான மருந்துகள் இருக்கக்கண்டுபிடிக்கப் பட்டது இதுசம்பந்தமாக ஒருவர் காவலில் வைக்கப்பட்டுள்ளார். [சி பி ஏ]

## இன்று

யாழ்ப்பாணம், சனி

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலய 6ந் திருவிழாவாகிய இன்றிரவு ஸ்ரீலஸ்ரீசுவாமிநாதத் தம்பிரானின் 'முருகம்மை' என்னும் பொருள் பற்றிய பிரசங்கமும் செல்வன் கே சிவபாலனின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும். இந்நிகழ்ச்சிகட்குப் பின்சுவாமி ஆட்டுக்கடா வாகனத்தில் வீதிவலம் வருவார்.

## கிழக்குப் பாகிஸ்தானில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

கிழக்குப் பாகிஸ்தானில் புதிய சட்டத்தின் கீழ் எவரையும் வீதியில் சுடுவதற்கு இராணுத்தினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது இங்குள்ள வங்கிகள் கல்வி நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டுள்ளன.

துப்பாக்கிகள், வெடிமருந்துகள் மற்றும் ஆயுதங்கள் வைத்திருப்பவர்கள் அவற்றை படிப்படியாக இராணுவத்திடம் ஒப்படைத்துவிடவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. காசோடு ஆயுதங்கள்-துப்பாக்கிகள் ஆகியவற்றைத் தேடுதல் செய்து பறிமுதல் செய்யவும் இராணுவத்தினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது கடந்த இரவு கிழக்குப் பாகிஸ்தான் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் கிழக்குப் பாகிஸ்தானில் ராணுவத்தினரின் தாக்குதலால் நிலைமை மோசமடைந்துள்ளதாகவும் ஜனாதிபதி யஹ்யாகான் உடனடி நடவடிக்கைகளைமேற்கொள்ளாவிட்டால் நிலைமை மேலும் மோசமாகிவிடும் எனவும் யஹ்யாகானுக்கு அறிவித்துள்ளார்.

இராணுவம் டாக்கா வானொலியை பொறுப்பேற்றுள்ளதென்ற செய்தியை அடுத்தே ஒலிபரப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

### இந்திய லோகசபையில் கவலை

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள உள்நாட்டுச் சண்டையையிட்டு இந்திய லோகசபையில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று லோகசபை இடைவேளையின்பின் கூடியபொழுது பிரஜா சோஷலிஸ்ட் உறுப்பினர் இப்பிரச்னையை கவனத்திற்குக் கொண்டுவந்தார். அங்குமக்களை இராணுவத்தினர் படுகொலைசெய்துவருகின்றனர்என அவர் தெரிவித்தார். கிழக்குப்பாகிஸ்தானில் நடைபெறும் அராஜகத்தை உடனடியாக ஐ. நா. சபையில் பாரதம் எழுப்ப வேண்டுமெனவும், பாரதம் சேக் முஜிபுருக்கு தார்மீக ஆதரவு அளிக்க வேண்டுமெனவும் கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினர் திரு. எஸ்.எம். பானர்ஜி கேட்டுக்கொண்டார்.

### முஜிபுர் சுடப்படலாம்

அவாமிலீக் தலைவர் சேக் முஜிபுர் ரஹ்மான் சுடப்படலாமெனவும், அரசாங்கம் இதுபற்றி அறிக்கை வெளியிட இனஞேர் வேண்டுமென கம்யூனிஸ்ட் உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

இதுபற்றி அரசாங்கம் உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும், உறுப்பினர்கள் பொறுமையுடன் இருக்க வேண்டுமெனவும், அரசாங்கம் இதுபற்றி விரைவில் அறிக்கையொன்றை வெளியிடுமெனவும் அமைச்சர் லால் பகதூர் தெரிவித்தார்.

### இலங்கையில் பூட்டோ

டாக்காவிலிருந்து கராச்சி திரும்புகையில், பண்டாரநாயக்கா சர்வதேசவிமான நிலையத்தில் பூட்டோ தங்கிச்சென்றார்.

டாக்காவில் நடைபெற்ற பேச்சுவார்த்தை பற்றி அவர் அதிருப்தி தெரிவித்தார். சமரசம்காண்பதற்குத்தான் சகல முயற்சிகளையும் மேற்கொண்டதாகவும் முஜிபுரின் பிடிவாதப்போக்கினுல் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் காணமுடியாமற் போய்விட்டதாகவும் அவர் கூறினர்.

### குற்றச்சாட்டு

சேக்முஜிபுரின் காவல் படையைத்தேடி இந்திய எல்லைக்குள் இராணுவம் புகுந்துள்ளதாக ஓர் செய்தி தெரிவித்து, அதற்காகக்கண்டனம் தெரிவித்துள்ளது

## யு என். பி. வெற்றி

கோட்டை, சனி

சமீபத்தில் நடைபெற்ற கொழும்பு மாநகரசபை சுதுவெல வட்டார உபதேர்தலின் ஐ. தே கட்சியைச் சேர்ந்த திரு சிறிசேன கூறே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. வி. ஏ. சமரவிக்கிரமவை 1015 வாக்குகளைப் பெரும்பான்மையாகப் பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

## லொறி - பஸ் மோதல் ஒருவர் ஆஸ்பத்தியில்

தாவடி, சனி

நெல்லுமூடைகளை ஏற்றிக்கொண்டுவந்த லொறியொன்றும் இ. போ. ச. பஸ்ஒன்றும் மோதியதால் பஸ்ஸில் வந்த இ. போ. ச. ஊழியர் பலத்த காயத்துக்குள்ளாகி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுளார்.

இச்சம்பவம் தாவடிச்சந்திக்கு அண்மையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. பஸ் ஊழியரின் கால்ப்பாதத்தை லொறியிலிருந்த மரமொன்றுதாக்கியதால் பலத்த காயமேற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## திருமலைச் செய்திகள்

(திருமலை நிருபர்)

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த கன்னியாவில் வெகுவிரைவில் கோழிப்பண்ணை உருவாக்கும் திட்டமொன்றை நகர பிரிவுக் காரியாதிகாரி ஸ்ரீசாம்பசிவ ஐயர் மேற்கொண்டுள்ளார் கோழிப்பண்ணையை அமைக்கும் பணியை உப்புவெளி அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது.

### நெற்களஞ்சியம்

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்தகிளிவெட்டி, கட்டைபறிச்சான், பாரதிபுரம், பள்ளிக்குடியிருப்பு ஆகிய கிராமங்களில் அரசாங்கத்தால் கட்டிமுடிக்கப்பட்டுள்ள நெற்களஞ்சியங்களை சித்திரை பதினைந்தாம் திகதி திருகோணமலை அரசாங்க அதிபர் திரு. திஸ்ஸ தெய்வேந்திரா திறந்து வைப்பார் கூட்டுறவு - பரிசோதகர் திரு நடராசா அதை அறிவித்துள்ளார்.

### முதலாம்திகதி மோதுவர்

திருகோணமலை சயினிங்ஸ்டார் கரப்பந்தாட்டக் கழகமும் கட்டைபறிச்சான் ஸ்ரீமுருகன் கரப்பந்தாட்டக் கழகமும் எதிர்வரும் 1-4-70ல் திருமலை பொது மைதானத்தில் மோதவுள்ளன. சயினிங்ஸ்டார் கரப்பந்தாட்டக் கழகம் நடாத்திவரும் இச்சுற்றுப் போட்டியில் திருமலை இந்துக்கல்லூரி கரப்பந்தாட்டக் கோஷ்டியை கட்டைபறிச்சான் ஸ்ரீமுருகன் கரப்பந்தாட்ட வீரர்கள் தோற்கடித்து வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### விபத்தில் குழந்தை

திருமலை ஏகாம்பரம் வீதி வழியாக வந்த வாடகைக்கார் அவ்வழியே வந்த 6 வயதுப் பாலகனை முட்டியது. தலையிலும் மூக்கிலும் பலத்தகாயம் ஏற்பட்டதன் காரணமாக பாலகன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

### வெற்றிபெற்றார்

கந்தளாய்ப் பட்டின சபையின் 6ம் வட்டார அங்கத்தவர் காலமானதால் 24ம் தேதி நடந்துமுடிந்த இடைத்தேர்தலில் ஜேமிஸ் சில்வா வெற்றியீட்டினார் அவசரகால நிலைமையின் கீழ் நடந்த இத்தேர்தலுக்கு பொலிசாரும், கடற்படையும் பலத்தகாவல் புரிந்தனர். ஜேமிஸ்சில்வா அவருடன் போட்டி இட்டவரிலும் [illegible] 70 [illegible] பெற்று வெற்றியை தமதாக்கிக் கொண்டார்.

## தெளிக்கும போது மயங்கி மாண்டார்

யாழ்ப்பாணம், சனி

புகையிலைச் செடிகளுக்கு கிருமிநாசினி தெளிக்கும் போது மயக்கமடைந்த நீர்வேலியைச்சேர்ந்த 55 வயதான சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை என்பவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்குமரணமானார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## 103வது வயதில் காலமானர்

எழுவைதீவு, வெள்ளி

எழுவைதீவைச் சேர்ந்த திரு. க. ஐயம்பிள்ளை என்பவர் தமது 103வது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

எழுவைதீவில் அண்மைக் காலத்தில் இருந்த ஆகக்கூடிய வயதுடைய இந்த முதியவர். இறக்கும்வரை மிகவும் திடகாத்திரமாகவேயிருந்தார்.

பல்லாண்டு காலப் பிரச்னையை

## சில ஆண்டுகளிற் தீர்க்க முடியாது —ஜே. ஆர்.

காலி, வெள்ளி

"இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு ஐந்து அரசாங்கங்கள் மாறிவிட்டன இருந்த பொழுதிலும் வேலையில்லாத்திண்டாட்டம் அந்நியச் செலாவணி போன்ற முக்கிய பிரச்னைகள் இதுவரையும் தீர்க்கப்படவில்லை. இந்தநிலைமை தொடர்ந்து நீடிக்குமானுல் மக்கள் வெறுப்புணர்ச்சி அடைந்து பாராளுமன்ற ஜனநாயகத்தையே உதறிவிடக் கூடும்."

இவ்வாறு கும்பளவெல்ல என்னும் இடத்திலுள்ள விஜயராம விகாரையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் மக்கள் தங்கள்கருத்துக்களை அரசியல் நிர்ணய சபைக்குத் தெரிவிக்கவேண்டும் புதிய அரசியல் திட்டம் அமைக்கப்படும் பொழுது, கட்சிகளின் கருத்துக்களை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும். அப்படிக்கொள்ளாவிட்டால் எதிர்க்கட்சி அரசில் நிர்ணயசபையில் கலந்துகொள்வதில் எவ்விதபயனுமில்லை 1947-ம் ஆண்டுக்குப்பின் உலகில் 100 நாடுகள் சுதந்திரம் பெற்றுள்ளன. இலங்கையும் இந்தியாவுமே இப்பொழுது பாராளுமன்ற ஜனநாயக வழியில் இயங்கிவருகின்றன மிகுதி 98 நாடுகள் இராணுவத்தலைமையிலோ அல்லது வேறு குழு அமைப்பு முறையிலேதான் இயங்கிவருகின்றன என்றார்.

பல நூற்றுண்டுகாலமாக இருந்து வரும் பிரச்னைகளை ஐந்து ஆண்டுக்குள்ளோ பத்தாண்டுக்குள்ளோ தீர்த்துவிடமுடியாது. எனவே, ஆகக்குறைந்த பிரச்னைகளைத் தீர்க்கவாவது ஒரு வட்டமேசை மகாநாட்டைக் கூட்டுமாறு அவர் பிரதமருக்கு வேண்டுகோள் ஒன்றைவிடுத்தார்.

## நேர்முகப் பரீட்சை

அம்பன், வெள்ளி

கடந்தவருடம் ஐப்பசி மாதம் நடைபெற்ற மாணவத் தாதிகளுக்கான நேர்முகப் பரீட்சை ரத்துச் செய்யப்பட்டு திரும்பவும்பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். பெண்களுக்கான நேர்முகப் பரீட்சை அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

ஆண்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 28, 29-ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவிருக்கின்றது.

கடந்த காலங்களில் மேற்படி பரீட்சைக்கான நேர்முகப் பரீட்சை அவ்வவ் மாவட்டங்களில் [illegible] நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

## 5 ஆயிரம் ...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீடில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இப்புதிய வீடுகள் பெரிதும் உதவும் என்று திரு. பீட்டர் கெனமன் தெரிவித்தார்.

3,500 ரூபாவிலிருந்து 5 000 ரூபாய்க்குள் இந்தப் புதிய வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகளை வீடமைப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது. இந்த 5 ஆயிரம் புதிய வீடுகளைத் தவிர சேரிகளில் வீடுகளை நிறுவுவதற்கு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுமென்றார் அமைச்சர் பீட்டர் கெனமன்.

30 ரூபாயிலிருந்து 40 ரூபாய்க்குள்ளேயேஇப்புதிய வீடுகளின் வாடகையாக அறவிடப்படுமென்று தெரிவித்தார், அமைச்சர் கெனமன்.

## 'தாய்மொழியில் போதனை'

மாவிட்டபுரம், வெள்ளி

"புதிய அரசியல் அமைப்பை ஆக்கும்போது மொழி விடயத்தில் எந்த பாஷை பேசுபவர்களாக இருந்தாலும் தாய்மொழி மூலம் போதனை பெறவும், மற்றும் வசதிகளைப் பெறவும் வசதி செய்யப்படவேண்டும் என்று அரசியல் நிர்ணய சபைக்கு சமர்ப்பித்துள்ள மகஜரில் திரு. மு. ஜெயரத்தினம் தெரிவித்துள்ளார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] கோவில் [illegible] 68-ம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ந் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org